R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM
NOVEMBER 2019
மலர் 24
இதழ் 10

L&L LAW SOLICITORS
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
46 High street
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# வல்லரசுகள் மோதட்டும்!
## தமிழர் வேடிக்கை பார்க்கட்டும்

கோதபயா ராஜபக்சவா? சஜித் பிரேமதாசாவா? 2009 முள்ளிவாய்க்காலில் தமிழ்மக்களைக் கொன்றொழித்து ஈழத் தமிழினத்துக்குப் பேரழிவை ஏற்படுத்துவதற்கு சிங்களத்துக்கு எல்லா உதவிகளையும் வழங்கிய வல்லரசுகள், தொடர்ந்து தமது 'கைவரிசை' யைக்காட்டிக் கொண்டுதானிருக்கிறன.

யுத்தகால ராணுவதளபதி சரத் பொன்சேகா இப்போது ஒரு எம்.பி.-சஜித்துக்குப் பக்கப்பாட்டு.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை தமக்கேற்ற மிகச் சிறந்த தளமாக இருப்பதால் சிங்களத்தைத் தம் வசப்படுத்துவதில் வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. தங்கள் தாளத்துக்கு ஆடக்கூடிய அரசுகளை உருவாக்குவதில் முற்று முழுதாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. 2015இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'நல்லாட்சியை உருவாக்கியது. அந்த அரசாட்சியை உருவாக்கிய அதே வல்லரசுகள் தான் இப்போது ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. இரட்டை பிரஜாவுரிமையைக் இரத்துக் செய்யாமல், இழுத்தடித்திருந்தால்கூட யுத்த வெற்றிக்குத் தானே காரணமென்று மார்பு தட்டும் மஹிந்தா தன் அருமைத் தம்பி கோதபயா ஜனாதிபதித் தேர்தலில் நின்றிருக்க முடியாது போயிருக்கும். வல்லரசுகள் நடந்துகின்ற கபட நாடகத்தில் இப்படியான வேஷங்களும் ஒன்று. கோதபயாவும் சஜித்தும் சிங்கள மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதிற்காக தமிழர்களை அழித்ததை சொல்லி வெற்றியைத் தமதாமாக்குவதில் முழுமூச்சாக இருக்கிறார்கள்.

ஐ.நா.வில் போர்க் குற்றவாளி என்று பிரகடனம்படுத்தப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா, ஜனாதிபதியாகத் தான் பதவி ஏற்றால் படைகளின் தளபதியாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இந்த அரசினால் நியமிக்கப்பட்ட அவர், அதே படைகளின் தளபதியாகத் தொடாந்து இருப்பார் என்று சஜீத் வாக்குறுதியளித்துள்ளார். இவரா தமிழர்களுக்கு உரிமைகளை அள்ளிக் கொடுக்கப்போகிறார்?

இருவருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்!

இலங்கை என்ற தளத்தைக் கைப்பற்றுவதற்காக வல்லரசுகள் நடாத்துகின்ற போட்டியில் தமிழர்கள் பகடைக்காய்களாகப்படுகின்றனர். 'அது கிடைக்கும், இது கிடைக்கும்' என்ற நப்பாசையை விதைத்து தமிழர்கள் இதுவரை காலமும். நம்பி நம்பி ஏமாந்தது போதும். இனி வல்லரசுகள் இலங்கையில் தளத்தைப் பிடிப்பதற்காக நடாத்தும் போட்டியல் ஏதாவது ஒரு தீர்வு கிடைக்கிறதா என்று பார்த்தாலென்ன?

**வல்லரசுகள் மோதட்டும்!**
**ஈழத் தமிழ்மக்கள் வேடிக்கை பார்க்கட்டும்!** ●


English tutor in Sutton
English tutoring for children of all ages on a 1:1 basis or in groups. Classes for 2019/20 start in November 2019.
Main focus on creative writing and comprehension for primary school children and GCSE preparation for secondary school children of all ages.
Call 02089150593 or 07900251586

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
18வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அனைத்தும்
அதிரடி மலிவு விலையில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலன்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

சக்தி சக்திதாசன்



# பிரெக்ஸிட்




## ஒண்ணுமே புரியலே! என்னமோ நடக்குது! மர்மமாய் இருக்குது!...

**கண்ணிலே கண்டதும் கனவாய் தோன்றுது**
**காதிலே கேட்டதும் கதை போலானது**
**என்னானு தெரியலை. சொன்னாலும் விளங்கலை**
**என்னைப் போல ஏமாளி எவனும் இல்லை.**
**ஒண்ணுமே புரியலை. உலகத்திலே..**

என்னமோ நடக்குது மர்மமா இருக்கு கவலை இல்லாத மனிதன் எனும் படத்தில் கவியரசர் கண்ணதாசன் வரிகளுக்கு உயிரூட்டி ஜே.பி சந்திரபாபு பாடி நடித்த பாடல் . இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைய இங்கிலாந்து அரசியல் நிலையயைப் பார்க்கும் சாதாரண வாக்காளர் நிலையும் ஏறக்குறைய இதேதான் போலுள்ளது.

அக்டோபர் 31 எனும் திகதி இங்கிலாந்தில் உள்ளவர்களினால் "ஹலோவின்" எனும் ஒரு தினமாக கொண்டாடப்படுவது ஒருபுறமிருக்க இந்த அக்டோபர் 31ம் திகதியைத் தனக்கு ஒரு சவாலாக எடுத்துக் கொண்டார் எமது பிரதமர் பொரிஸ் ஜான்சன்.

ஆமாம் ஐக்கிய இராச்சியத்தை , ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றும் நாளாக இதற்காக முழுமூச்சாக உழைத்தார். இதனோடு தனது செல்வாக்கையே பணயம் வைத்திருந்தார். பிரெக்ஸிட் எனும் நிகழ்வுக்கு மக்கள் ஆதரவு கிடைத்ததையடுத்து முன்னாள் பிரதமர் தெரேசா மே அவர்களினால் இவ்வருடம் மே மாதம் 29ம் திகதியுடன் இங்கிலாந்து வெளியேற வேண்டியதாக இருந்தது. ஆனால் திருப்திகரமான உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்துடன் எட்டவில்லையஅதலால் இக்காலக்கெடு அக்டோபர் 31ம் திகதிக்குத் தள்ளப்பட்டது. மேலும் இக்கெடுவுக்குள் வெளியேறுவது சந்தேகமாக இருந்ததினால் அதற்கான குற்றச்சாட்டு தெரேசா மே மேல் விழுந்து அவர் பதவி விலக நம்ப தற்போதைய பிரதமர் பொரிஸ் ஜான்சன் பிரதமரானது அனைவரும் அறிந்ததே..

பதவிக்கு போட்டியிடத் தொடங்கியது முதல் உடன்படிக்கையுடனோ அன்றி உடன்படிக்கையின்றியோ அக்டோபர் 31ம் திகதி ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது உறுதி என்று உத்தரவாதமளித்து வந்தார் பொரிஸ் ஜான்சன்.ஆவரது நோக்கம் உடன்படிக்கையில்லாமல் வெளியேறுவதே என்று முடிவு கட்டிய எதிர்க்கட்சியினரும், அவரது கட்சியைச் சேர்ந்த சிலரும் இணைந்து பாராளுமன்ற ஜனநாயகக் கோட்பாடுகளை உபயோகித்து பொரிஸ் ஜான்சன் அவர்களின் கைகளை ஒரு சட்டமூலம் கட்டினார்கள்.

அச்சட்டத்தின் படி அக்டோபர் 19ம் திகதிவரை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உடன்படிக்கையை பிரதமர் எட்டத்தவறினால் அவர் அக்ஷோபர் 31ம் திகதி காலக்கெடுவைத் தள்ளி வைக்கும் கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்திடம் கடிதமூலம் கோரவேண்டும். இது சம்பந்தமாக பிரதமரிடம் ஊடகங்களினால் கேள்வி எழுப்பப்பட்டபோது நான் சட்டத்தை மீறமாட்டேன் ஆனால் அக்டோபர் 31ம் திகதி வெளியேறுவோம் என்பது உறுதி என்றார். அப்போது ஒரு செய்தியாளர் ஒருகால் உங்களால் அத்திகதியில் வெளியேறுவது முடியாமல் போனால் கஅலக்கெடுவை நீடிக்கக் கோருவீர்களா? என்று கேட்டபோது "ஒரு சேற்றுக்குழியில் பிணமாகக் கிடந்தாலும் கிடப்பேனேயொழிய ஒருபோதும் அக்டோபர் 31ம் திகதிக்கு நீடிப்பு கோரமாட்டேன்" என்றார் திடமாக.



ஐரோப்பிய ஒன்றியத்துடன் பல தடவைகள் பேசி தெரேசா மே எட்டிய ஒப்பந்தத்தில் சிறிய மாற்றங்களுடன் அக்டோபர் 19ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சித்தபோது எதிர்க்கட்சிகள் இணைந்து அதற்கு முட்டுக்கட்டையிட்டன. சட்டத்தின் பிரகாரம் அன்றிரவு 11 மணிக்கு பின்னால் ஐரோப்பிய ஒன்றியத்திடம் அக்டோபர் 31ம் திகதி காலக்கெடுவுக்கு நீடிப்புக் கேட்டு ஒரு கடிதத்தை எழுதும் நிலைக்குத்

**பிரதான எதிர்க்கட்சியான லேபர் கட்சி எத்தகைய ஒரு நிலைப்பாட்டினை எடுக்கப் போகிறார்கள் என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.**

தள்ளப்பட்டார். எந்தவொரு சூழலிலும் தான் நீடிப்பு கேட்கமாட்டேன் என்று கூறியிருந்ததை நியாயப்படுத்த அக்கடிதத்தைத் தனது கையொப்பமின்றி அனுப்பினார், அதைத் தொடர்ந்து மற்றொரு கடிதத்தில் இந்த நீடிப்பினால் எவருக்கும் உபயோகமில்லை என்று தனது கையொப்பத்துடன் ஒரு கடிதத்தையும் அனுப்பினார்.

ஐரோப்பிய ஒன்றியம் தன்னுடைய நிலையை உணர்ந்து அக்டோபர் 31 காலக்கெடுவை நீடிக்க மாட்டார்கள் என்று எமது பிரதமர் எண்ணினார் போலும்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் கொள்கையளவில் நீடிப்பு கொடுப்பது என்று கடந்த வெள்ளி அதாவது அக்டோபர் 25ம் திகதி முடிவெடுத்தார்கள் ஆனால் எவ்வளவு காலம் நீடிப்பது என்பதை அக்டோபர் 28 வரை தள்ளி வைத்தார்கள். அதற்குக் காரணம் பிரதமர் பொரிஸ் ஜான்சன் 28ம் திகதி பாராளுமன்றத்தில் டிசம்பர் 12ம் திகதி பொதுத்தேர்தல் நடத்துவதற்கு பாராளுமன்ற அங்கத்தினர்களின் ஆதரவுக்கான மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க இருந்ததே.

இன்று அக்டோபர் 28ம் திகதி பிரதமரின் வேண்டுகோள் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. இதற்குத் தேவையான 434 பாரஅளுமன்ற அங்கத்தினர்களின் ஆதரவை அவர் பெறவில்லை. இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றியம் ஐக்கிய இரஅச்சியம் ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கான காலக்கெடுவை 2020 ஜனவரி 31ம் திகதிவரை நீடித்துள்ளது. ஆனால் இடையில் எப்போது இங்கிலாந்துப் பாராளுமன்றம் ஒரு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால் அப்போதே விலகலாம் எனும் சலுகையையும் அளித்துள்ளது..

அடுத்து நமது பிரதமரின் நகர்வு என்ன? நாளை அதாவது அக்டோபர் 29ம் திகதி பராளுமன்றத்தில் டிசம்பர் 12ம் திகதி தேர்தலை நடத்துவதற்கான ஒரு சட்ட மசோதாவை கொண்டு வர இருக்கிறார். இது அவருக்கு வெற்றியளிக்குமா? என்பது சந்தேகமே!

பிரதான எதிர்க்கட்சியான லேபர் கட்சியைத் தவிர்ந்த ஏனைய இரு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பிரதமருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவிருக்கிறார்கள். அதாவது தங்களது மூன்று கோரிக்கைகள்

1. ப்ரெக்ஸிட்டுக்கான கால எல்லை 2020 ஜனவரி 31 வரை நீடிக்கப்பட வேண்டும்.
2. பொதுத்தேர்தலுக்கு முன்னால் பொரிஸ் ஜான்சன் அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் எட்டிய உடன்படிக்கையை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கக் கூடாது
3. உடன்படிக்கையற்ற விலகல் எனும் நிகழ்வு முற்றாக நீக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் தாங்கள் டிசம்பர் 9ம் திகதி தேர்தல் நடத்துவதற்கான ஒரு சட்ட மசோதைவைக் கொண்டு வந்து அதனை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது அனைவருடைய கவனமும் அடுத்த அரச நகர்வினையும் , இந்த இரண்டு எதிர்க்கட்சியினரின் நிலைப்பாட்டுக்கு அரசு எவ்வகையான பதிலைக் கொடுக்கப் போகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான லேபர் கட்சி எத்தகைய ஒரு நிலைப்பாட்டினை எடுக்கப் போகிறார்கள் என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. பொதுத்தேர்தல் வேண்டும், வேண்டும் என்று கூப்பாடு போட்டுக்கொண்டிருந்த பிரதான எதிர்க்கட்சியின் தயக்கத்துக்குக் காரணம் உண்மையிலே ப்ரெக்ஸிட் சம்பந்தமனதுதான இல்லையெனில் கருத்துக்கணிப்புகளில் அவர்களின் பின்னடைவின் காரணமா? என்பது பற்றி பல அரசியல் விமர்சகர்கள் அலசுவது தெரிகிறது.

இன்றைய நிலையில் நிச்சயமானது ஐக்கிய இராச்சியம் அக்டோபர் 31ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற மாட்டாது..

நிச்சயமற்றது பொதுத்தேர்தல் எப்போது ?
ஒண்ணுமே புரியலே!
என்னமோ நடக்குது !
மர்மமாய் இருக்குது!



# சஜித்தை 3 கட்சிக் கூட்டமைப்பு ஆதரிப்பதற்கு 5 கட்சிகளின் ஆவணம் தடையாக இருக்காது!

**கூட்டமைப்பின் ஆதரவு தங்களுக்குத் தேவையில்லையென்று கோதபாய அணி கூறிவரும் வேளையில், தமிழ் கட்சிகளின் கோரிக்கையை நிராகரிக்கும் கோதபாயவுடன் பேசத் தயாரில்லை என்ற தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் அறிவிப்பில் மறைபொருள் என்ன?**

எந்தவொரு தேர்தலானாலும் அதில் போட்டியிடும் கட்சிகள் மக்களுக்கான தங்களின் எதிர்கால திட்டங்களை முன்வைத்து வாக்குக் கேட்பதே வழமை. இது ஜனநாயகக் கூறுகளின் முக்கியமான பண்புகளில் ஒன்று.

இலங்கையில் இந்த மாதம் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அப்படியான எதனையும் காணமுடியவில்லை.

மாறாக, மக்களுக்கு எத்தகைய இழப்புகளை ஏற்படுத்தினோம் என்ற வீராவேச முழக்கங்களையும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்னவற்றைச் செய்ய மாட்டோம் என்பதையுமே போட்டியிடுபவர்கள் தெரிவித்து வருவதைக் காணமுடிகிறது.

இந்த வகையில், இந்த மாதத் தேர்தல் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராக மக்களை இனவாத, மதவாத மோதல்களுக்குள் தள்ளிவிடும் ஒன்றாக முன்னெடுக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதில் முன்னணியில் நின்றது, அல்லது செய்து முடித்தது நீயா நானா என்ற போட்டி கோதபாய மற்றும் சஜித் தரப்புகளுக்கிடையே எழும்பியுள்ளது.

யுத்தத்தை வெற்றி கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் நானே மேற்கொண்டேன், நானே யுத்தத்தையும் வென்றேன் என்று மேடைகளில் முழங்கி வருகிறார் சரத் பொன்சேகா.

யுத்த காலத்தில் இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த இவர் தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அத்துடன் சஜித் பிரேமதாசவின் பரப்புரைக்கு பொறுப்பானவர்களிலும் ஒருவர்.

ஆனால், கோதபாய ராஜபக்ச யுத்த வெற்றிக்கு தாமே பொறுப்பென்று உரிமை கோருகிறார். அப்போது பாதுகாப்புப் படைகள் அனைத்துக்கும் தாமே பொறுப்பாக இருந்ததாகக் கூறும் இவர் தமது வழிநடத்தலே யுத்த வெற்றிக்குக் காரணமெனவும் மார்பு தட்டுகிறார்.

இவர்கள் இருவரும் மாறி மாறி யுத்த வெற்றிக்கு தாங்களே பொறுப்பு என்று உரிமை கோருவதன் ஊடாக ஓர் உண்மை அம்பலமாகியுள்ளது. அதாவது, ஒரு லட்சத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கும், இன்னொரு தொகையினர் காணாமல் ஆக்கப்பட்டதற்கும் தாமே காரணம் என்பதை தெரிந்தோ தெரியாமலோ இவர்கள் ஒப்புக்கொண்டவர்களாகியுள்ளனர்.

அடுத்துக் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் முயற்சியால் ஐந்து தமிழ் கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்ட 13 அம்ச கோரிக்கை ஆவணம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசு, ரெலோ, புளொட் ஆகிய மூன்றுடன் சி.வி. விக்னேஸ்வரன் தலைமை தாங்கும் தமிழ் மக்கள் பேரவையும், சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் தற்காலிகமாக இணைந்து இந்த 13 அம்ச கோரிக்கையை ஏற்றுக் கொண்டன.

இதனை அடிப்படையாக வைத்து முக்கிய ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென முடிவானது. அதுவும், அந்த வேட்பாளர்கள் தங்களை அழைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்குச் செல்வதென கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதனை எழுதும்வரை எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் பேச்சுவார்த்தைக்கு இவர்களை அழைக்கவில்லை. அதேசமயம் இவ்விடயத்தை ஊடகங்கள் வழியாகப் பார்த்தறிந்த கோதபாயவும் சஜித் பிரேமதாசவும் குறிப்பிட்ட 13 அம்சம் தொடர்பாக எவருடனும் பேச மாட்டோம் என்று ஊடகங்கள் வாயிலாக அறியக்கொடுத்துள்ளனர்.

எந்த நிபந்தனைக்கும் நாம் உடன்பட மாட்டோமென்று இரண்டு வேட்பாளர்களும் தனித்தனியாக அறிவித்துவிட்ட சூழ்நிலையில் 13 அம்ச ஆவணம் செல்லாக்காசாக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடந்த மாத இறுதியில் கொழும்பில் கூடி அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்க ஏற்பாடாகியிருந்தது. ஆனால், திரு. விக்னேஸ்வரனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஏனோ கலந்து கொள்ளாததால் கூட்டம் நடைபெறவில்லை. கூட்டமைப்பின் மூன்று கட்சியினரும் காத்திருந்து ஏமாந்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணத்தில் 5 கட்சியினரும் சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராய்வதாக முடிவெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர்கள் 13 அம்ச ஆவணத்தை முன்னிலைப்படுத்தி பேசத் தயாரில்லை என்ற நிலையில், 5



கட்சிகளும் கூடி எடுக்க வேண்டிய முடிவு என்ன உள்ளது என்ற கேள்வியை விக்னேஸ்வரன் எழுப்பியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக இன்னொரு தகவலும் வெளியாகியுள்ளது. 13 அம்சத் திட்டம் பற்றி ஊடகங்கள் வாயிலாக அறிந்தோமே தவிர, அதிகாரபூர்வமாக தங்களுக்கு இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லையென்று ஜே.வி.வி. வேட்பாளர் அனுர குமார திசநாயக்க தெரிவித்ததை வானொலி ஒன்றின் வாயிலாகக் கேட்ட விக்னேஸ்வரன், உடனடியாக தம்பாட்டில் ஒரு விடயத்தை முன்னெடுத்துள்ளார்.

தமிழில் தயாரிக்கப்பட்டிருந்த 13 அம்ச ஆவணத்தின் ஆங்கிலப்பிரதியை உடனடியாக சஜித் பிரேமதாச, அனுர குமார திசநாயக்க, கோதபாய ராஜபக்ச ஆகிய மூவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

5 கட்சிகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய கூட்டுப்பொறுப்பை அவர்கள் செய்யத் தவறியதால் விக்னேஸ்வரன் தாமாகவே இதனைச் செய்துள்ளார். கொழும்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத போதிலும் இவர் மேற்கொண்ட இந்நடவடிக்கை புத்திசாலித்தனமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் 5 கட்சிகளின் கூட்ட முடிவை ஓரந்தள்ளிவிட்டு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனியாகச் சந்தித்து என்ன பேசினார்கள் என்ற கேள்வி 5 கட்சி கூட்டுக்குள் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரை ஆதரிப்பதென்ற கூட்டமைப்பின் முற்கூட்டிய ரகசிய முடிவைச் செயற்படுத்தவே இச்சந்திப்பு நடைபெற்றதாயின், 5 கட்சிகள் சேர்ந்தெடுத்த 13 அம்ச ஆவணம் எதற்காக என்ற கேள்வி சிலரிடம் எழுந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்ல வேண்டுமென்பதைவிட, யார் வெல்லக்கூடாதென்பதில் பெரும்பாலான தமிழ் மக்கள் நிதானமாக உள்ளனர்.

யுத்த கால பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோதபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக ஓய்வு பெற்ற முக்கிய இராணுவ உயர் அதிகாரிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருப்பதால் கோதபாய மீதான அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் மேலும் அதிகரித்துள்ளது.

அதேசமயம், தமிழ் மக்கள் ஆதரவு தங்களுக்குக் கிடைக்காதென்பதை இவர்கள் நன்கறிவர். ஆதலால், சிங்கள் மக்களின் வாக்குகளை தங்கள் பக்கம் சரிப்பதற்கான சகல வழிமுறைகளையும் இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கேற்றாற்போன்று சில முக்கிய அறிவித்தல்களையும் தினமும் கேட்க முடிகிறது.

வடக்கின் பல பகுதிகளுக்கும் சென்று பரப்புரைகளை முடித்துக் கொண்ட நாமல் ராஜபக்ச, கூட்டமைப்பின் ஆதரவு தங்களுக்குத் தேவையில்லையென்று தெரிவித்துள்ளார்.

கோதபாய அணியின் முக்கிய புள்ளியான டளஸ் அளகப்பெரும ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில், கூட்டமைப்பு சஜித்தை ஆதரித்தாலும் தங்களுக்குப் பாதிப்பில்லையென்று தெரிவித்துள்ளார்.

இதற்குப் பிறகும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா சும்மா இருப்பாரா? தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரித்துள்ள கோதபாயவுடன் பேசத் தயாரில்லையென்று நெற்றியடிபோல அறிவித்துள்ளார். 5 கட்சிகளின் புதிய கூட்டணிக்குள் ஒன்றாகவிருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவரின் இந்த அறிவிப்பு, கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டில் உள்ளதென்பதை தெரியத்தந்துள்ளது.

13 என்பது சிங்கள தேசத்துக்கு எப்போதுமே எட்டாப்பொருத்தமான இலக்கம். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13வது திருத்தம் 32 வருடங்களாகியும் நடைமுறைக்கு வரவில்லை. 13 பிளஸ் என்று மகிந்த ராஜபக்ச அடிக்கடி கூறிவந்ததும் காற்றோடு கலந்து போயிற்று.

இப்போது 5 கட்சிகள் கூட்டணியின் 13 அம்சக் கோரிக்கைக்கும் அதுவே முடிவு என்று தெரிகிறது.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. 13 அம்சத் திட்டத்தை சஜித் நிராகரித்தாலும், ரணில் உடன்பட்டதாக அறிவிக்காவிட்டாலும், 3 கட்சிகளைக் கொண்ட கூட்டமைப்பு தனது ஆதரவை சஜித்துக்கே வழங்கும் என்பது ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்ட முடிவு.

வழக்கம்போல கொஞ்சம் இழுத்தடித்த பின்னரே கூட்டமைப்பு சரியான விளக்கங்களோடு இதனை அறிவிக்கும். அதற்கான அறிக்கையை சுமந்திரன் தயாரிக்க ஆரம்பித்துவிட்டாரென்பது ரகசியமன்று. ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## DANCE COMPETITION

இளம் கலைஞர்கள் தங்கள் திறமைகளை உலகெங்கும் வெளிப்படுத்த சாஸ்வதம் ஓர் செவ்வியல் நடனப் போட்டியை நடத்தவுள்ளது. சாஸ்வதம், 8–16 வயதுடைய இளம் திறமையாளர்களுக்கு திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

30 November 2019 - 5 மணியளவில், Harrow, st Andrew Church அரங்கில் தெரிவு செய்யப்பட்ட 11 குழுக்கள் கொண்ட போட்டியாளர், 5 நீதிபதிகள் முன்னிலையில் திறமைகளை வெளிப்படுதஉள்ளனர்.

விரைந்து உங்கள் நுழைவு சீட்டுகளை பெறுமாறு கேட்டு கொள்கிறோம்.

சாஸ்வதம்
07443 735906/ 07506 946038
info@sasvatham.com


# இலண்டனில் 'கண்டேன் கைலாசம்' நூல் வெளியீட்டு விழா

கயிலை மலையானின் கரையிலாப் பெருமை போற்றும் டாக்டர் அம்பி எழுதிய 'கண்டேன் கைலாசம்' புனித யாத்திரை நூல் வெளியீட்டு விழா 17.11.2019, ஞாயிறு மாலை 5.30 மணிக்கு இலண்டன் ஈஸ்ற்ஹாம் முருகன் ஆலய மண்டபத்தில் (78-90 Church Road, Manor Park, London E 12 6AF) நடைபெறவிருக்கிறது.

இந்நூல் தமிழியல் பதிப்பகம் வெளியீடு.

இலண்டன் முருகன் கோயில் தலைவர் திரு. எஸ். சம்பத்குமார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், யோக சிரோமணி மைக் டிம்சன், பேராசிரியர் ஆர். சுவாமிநாதன், டாக்டர் சாரதா நற்குணராஜா, டாக்டர் கே. சிவகுமார், கே. ஜெகதீஸ்வரம்பிள்ளை, ஆர். பத்மநாப ஐயர், முன்னாள் விரிவுரையாளர் எம். நித்தியானந்தன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். நூலாசிரியர் பி. அம்பிகாபதி (இலண்டன் அம்பி) ஏற்புரை நிகழ்த்துவார்.

# மரண அறிவித்தல்



பிறப்பு
17.01.1942

இறப்பு
29.10.2019

## திரு.நாகராசா சிவானந்தசோதி

ஆசிரியர், லண்டன் தமிழர் தகவல் (கரம்பன்- லண்டன்)

யாழ்ப்பாணம் கரம்பனைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நாகராசா சிவானந்தசோதி அவர்கள் லண்டனில் 29.10.2019 அன்று சிவபதமடைந்தார். அன்னார் நாகராசா தம்பதிகளின் அன்பு மகனும், பத்மினி அவர்களின் அன்புக் கணவரும், நந்தினி, பிருந்தா, காயத்திரி, ராதிகா, பாரதி, செந்தூரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சுந்தர், பிரபு, முரளிதாஸ், பார்த்தன் ஆகியோரின் மாமனாரும், மதுரன், மிதுன், மயிலன், வேலா, சம்யுக்தா, அமிர்தா, சேனா ஆகியோரின் தாத்தாவுமாவார்.

அன்னாரின் கிரியைகள் - தகனம் 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. காலை 8.00 மணிக்கு லூயிஷியத்தில் கிரியையும், 11.30 மணிக்கு HITHER GREEN CREMATORIUM, VERDANT LANE. CATFORD LONDON SE6 1TP CREMATORIUM மயானத்தில் தகனமும் நடைபெறும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

செந்தூரன் (மகன்) 07476835183, பிருந்தா (மகள்) 07939528556
வீடு : 020 8480 2836
(41, HADDINGTON ROAD, BROMLEY BRI 5RG)

உ
சிவமயம்

# சைவத் தமிழ்க் காவலன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழாவும் குருபூசையும்



லூயிசம் தமிழ்ப் பாடசாலையின் வழிநடத்தலுடன்

சிவன் நிலைய மண்டபத்தில்
4A CLARENDON RISE, LEWISHAM. SE13 5ES
22.11.19ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு விழா ஆரம்பமாகும். (கதவுகள் 5.30 மணிக்கு திறக்கப்படும்)

பாடசாலை மாணவர்களுடைய நிகழ்ச்சிகளுடன் பின்வருவோர் உரையாற்றுவர்.

- சிவஸ்ரீ ச. சர்வேஸ்வரக் குருக்கள்
- திரு. க. ஜெகதீஸ்வரம்பிள்ளை
- திருமதி. இரசந்தினி சிவநேசன்
- திரு. இளஞ்சேய் வேந்தனார்
- திரு. செ கனகசுந்தரம்
- திரு. க. சிவானந்தன்
- திரு. சி. பத்மமோகன்
- திரு. அ. சர்வநாதன்
- திரு. மா. இந்துசேகர்
- திரு. ப. தர்மரூபன்
- திரு. இ. முருகானந்தம்
- திரு. சிவ பரிமேலழகர்
- திரு. சக்தி தாசன் - கவிதை



இப்போதுள்ள இக்கட்டான சூழலில் எம்மையும் எமது வருங்கால சந்ததியினரையும் வழிநடத்தவும், ஒளிகாட்டவும், புதியதோர் உலகம் செய்வோம் எனும் கருப்பொருளில், எமக்கொரு நவயுக நாவலர் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகின்றார்.

ஈழத்து நாவலரை நினைவு கூருவோம் அவர்தம் பாதம் பணிவோம். நாவலரின் ஆன்மா எமது சந்ததியினரை வளிநடத்துவார். காலம் வழிவிடும். நம்பிக்கை நல்ல எதிர்காலத்தை உருவாக்கும்.

இனி ஒரு உலகம் செய்ய, இவ்வருடம் நாவலரை நினைவுகூர்ந்து சிறப்புச் செய்வதன் மூலம் புதிய அத்தியாயம் ஒன்றினை எழுதிட
திரண்டு வாருங்கள்! திரளாக வாருங்கள் !! நிறைந்து வாருங்கள்!!!
நன்றி கலந்த வணக்கங்கள்

இரவு போசனத்துடன் நாவலர் விழா நிறைவு பெறும்.
மேலதிக விபரங்களுக்கு லூயிசயம் தமிழ்ப் பாடசாலை : 07788196426

# ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்



பிறப்பு
18.01.1926

இறப்பு
22.09.2019

## திருமதி. பராசக்தி பசுபதிப்பிள்ளை

வேலனை இலந்தவனம் சித்தி விநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இலண்டன் Wembley-யை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி. பராசக்தி பசுபதிப்பிள்ளை அவர்கள் 22.09.2019 இறைவனடி சேர்ந்தார். அன்னாரது ஆத்மா நிரந்தர அமைதியும், பூரண சாந்தியும் அடைய வேண்டும் என்று அவர் வணங்கிய அத்தனை தெய்வங்களையும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும் மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள், பூட்டக் குழந்தைகள், உற்றார் உறவினர்

தகவல் : தா. யோகநாதன்
07861533500 / 02087952661



# விமலின் பக்கம்

தமிழ்நாட்டின் சிவகெங்கைக்கு அருகே கீழடி என்ற இடத்தில் தமிழ்நாடு தொல்பொருள் அகழ் ஆய்வுத் திணைக்களம் நடத்தி வரும் அகழாய்வுகளை அடுத்து கடந்த செப்டம்பர் மாதம் தனது கண்டுபிடிப்புக்களைப் பற்றி வெளியிட்டிருந்த அதிகாரபூர்வ அறிக்கை, தமிழ் மொழியையும் தமிழ் கலை - கலாச்சாரத்தையும் நேசிக்கும் உங்களையும் என்னையும் போன்ற தமிழர்கள் காதுகளில் தேனாய் பாய்ந்தது. வைகை நதியின் கரைகளில சங்க காலத்து தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்றும் அவர்கள் பயன்படுத்திய 'கலாச்சாரப் பொருட்கள்' தமது அகழ்வு ஆராய்ச்சிகளில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

6-ம் நூற்றாண்டுக்கும் முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை என்று கருதப்படும் இந்தக் கலாச்சாரப் பொருட்கள் சுமார் கி.மு. 500-ம் ஆண்டளவில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வாய்வின் கண்டுபிடிப்புக்களை சுருங்கச் சொல்வதானால், தமிழ்நாட்டின் வைகை நதிக் கரை வட்டகையில் எழுதவும் படிக்கவும் தெரிந்த அறிவார்ந்த சமூகம் ஒன்று 6-ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் வாழ்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மிகப் பெரும் சமூக-கலாச்சார அபிவிருத்தி ஏற்பட்டது கி.மு. 300-ம் ஆண்டளவில் சங்க காலத்தில்தான் என்று இதுவரை இருந்த கருத்தை இந்த கீழடி அகழ்வு ஆராய்ச்சிகள் இன்னும் பின்னால் தள்ளியிருக்கின்றன. அதாவது கி.மு. 300-ம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்க காலம் இருந்திருக்கலாம் என்றும் தமிழர்களின் இலக்கிய ஆற்றல், எழுத்தாற்றல் 6-ம் நூற்றாண்டிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் இந்த அறிக்கையின் மூலம் தெரிய வந்திருக்கிறது.



எரிக் சொல்ஹெய்ம் அவர்களுடன்

தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் ஸ்டாலின் புதுடில்லியில் பாஜக நடத்தும் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் - 'கீழடி தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பகுதி பாதுகாக்கப்பட்ட ஒரு தொகுதியாக மத்திய அரசால் பிரகடனம் செய்யப்பட வேண்டும்' என்றும் 'அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் தொல்பெருள் அருங்காட்சியகம் ஒன்றில் வைக்கப்பட வேண்டும்' என்றும் கேட்டிருக்கிறார்.

ஜேர்மனி நாட்டின் தென் மேற்குப் பகுதியில் இருக்கிறது 'மியூனிக்' என்ற ஒரு நகரம்.

ஜேர்மனியின் பெரிய நகரம் பெர்லின், இரண்டாவது நகரம் ஹம்பேர்க், மூன்றாவது பெரிய நகரம் மியூனிக்.

1920-களில் பல்வேறு அரசியல் குழுக்கள் மியூனிக்கில் இயங்கி வந்தன. அவற்றில் ஒன்று ஹிட்லரின் 'நாஸி இயக்கம். 1923-ல் ஜெர்மன் அரசாங்கத்தைக் கைப்பற்ற நாஸி இயக்கம் முற்பட்டபோது மியூக்கின் பவேரிய காவல் துறையின் துப்பாக்கிப் பிரயோகத்தால் அது தடுக்கப்பட்டது.



கீழடி அகழ்வு

சில வருடங்களின் பின் நாஸிகள். ஜேர்மனியில் ஆட்சி அமைத்தபோது நாஸி இயக்கத்தின் தலைநகரமாக மியூனிக் நகரம் பிரகடனம் செய்யப்பட்டது. இரண்டாம் உலகப் போர் சமயத்தில் மியூனிக் நகரம் கடுமையாகத் தாக்கப்பட்டு அடி வாங்கியது.

1949-ல் போர் முடிவடைந்து அமைதி திரும்பியதும் பொருளாதார முன்னேற்றம் துரிதமாக ஏற்பட்டது. பல்கலைக்கழகங்களும் BMW போன்ற கார் தயாரிப்பு தொழிற்சாலைகளும் மியூனிக்கில் அமைக்கப்பட்டன.



விமலின் பக்கங்கள் நூலின் முதல் பிரதி

மியூனிக்கில் இன்று ஐந்தரை லட்சம் வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கிறார்கள். இவர்களில் தமிழ் ஈழத்தவர்களும் அடங்குவர். இவர்களுள் ஒருவர்தான் என் இனிய நண்பர் அன்டன் ஜோசப். மாபெரும் ஆவணக் களஞ்சியம் ஒன்றைப் பல தசாப்தங்களாக பேணிப் பாதுகாத்து வரும் அன்டன் அவ்வப்போது அவற்றை கண்காட்சிக்கு வைக்கிறார் - மக்களை வியப்படைய வைக்கிறார்.

நாளிதழ்கள், வாரப் பத்திரிகைகள், வரலாற்று நூல்கள், ஓலைச் சுவடிகள், தொன்மை மிக்க நாணயங்கள், தபால் முத்திரைகள், போர்க்காலப் பிரசுரங்கள். 1975 முதல் இன்று வரையிலான இந்தப் பொருட்களை எமது எதிர்காலச் சந்ததியினருக்காக அன்டன் சேர்க்கிறார்.

கண்காட்சிகளை பல தடவை நடாத்தி விட்டார். கடந்த அக்டோபர் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்த கண்காட்சி, கலை நிகழ்வு ஆகியவற்றில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள இலண்டனில் இருந்து என்னை அழைத்திருந்தார். கனடா நாட்டில் இருந்து பேராசிரியர் சேரன், ஒலிபரப்பாளர் மேர்வின் மகேசன், கொழும்பில் இருந்து ஒலிபரப்பாளர் ரஜினி ராஜ்மோகன், காத்தான்குடியில் இருந்து பாத்திமா ஷர்மிளா இம்தியாஸ், யாழ்ப்பாண முன்னாள் நூலகர் ரூபவதி நடராஜா, இலண்டன் ஐபிசி நிறுவனர், நாடகப் பேராசான் தாசீசியஸ், யாழ்ப்பாண மருத்துவர் சத்தியமூர்த்தி, நெதர்லாந்து ஊடகர் ரியாஸ் உட்பட ஏராளமானோர் வருகை தந்திருந்தனர். அன்டன் அவர்களின் மனைவி, சகோதரர்கள், நண்பர்கள். குடும்பத்தினர் தமது சொந்த வைபவம் போல் கருதி இதனை நடத்தியிருந்தனர்.



முனிச் அன்டன் ஜோசப்

காலை 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கண்காட்சியும் 4 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரை இடைவிடாத உணவு வழங்கப்பட்டிருந்ததைக் காண எனக்கு வியப்பாக இருந்தது.

பிற்பகல் நிகழ்வின்போது பிரதம விருந்தினராக நோர்வே நாட்டின் சமாதானத் தூதர் திரு. எரிக் சொல்ஹெய்ம் வந்திருந்தார்.

நான் எழுதி சென்னையில் வெளியிடப்பட்ட 'விமலின் பக்கங்கள்' நூலின் பிரதி ஒன்றை அவரிடம் கையளித்தேன். நீங்கள் முதல் பக்கத்தில் கையெழுத்திட்டுத் தரமுடியுமா? என்று கேட்டார்.

அன்று இரவு TWEET-ல் எரிக் சொல்ஹெய்ம் எழுதியது:-

“இந்த 20-ம் நூற்றாண்டில் நடத்தப்பட்ட மிகப் பெரிய கலாச்சாரப் பேரழிவுகளில் யாழ் நூல் நிலையம் எரிப்பும் ஒன்றே. மியூனிக் நகரில் அன்டன் ஜோசப்பின் கண்காட்சியில் கலந்து கொள்ள முடிந்தது பற்றி எனக்குப் பெரு மகிழ்ச்சி.

”ஒரு கலாச்சாரத்தை அழித்து விடாமல் கட்டி எழுப்புவது எப்படி என்று அன்டனின் கண்காட்சி காட்டியது!”

எமது ஈழத் தாயகம் ஜனாதிபதி தேர்தலை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து ஈழத்தில் ஸ்திரமான ஆட்சி ஏற்படுமா என்ற சந்தேகமே தமிழர்கள் மனதில் ஊசலாடுகிறது. 2009 போர்க் காலத்தில் அப்பாவி தமிழ் பொதுமக்களை கூட்டம் கூட்டமாக அழித்த ஒரு கொடுங்கோலன் - தன்னைக் கேள்வி கேட்ட பத்திரிகையாளர்களைத் துவம்சம் செய்த ஒருவன் - தனக்குத் துணைநின்ற ராணுவ அதிகாரியை நாட்டின் ராணுவத் தளபதியாக்கி அழகு பார்ப்பவன் பொதுமக்களின் கோடானு கோடி பணத்தைக் கொள்ளையடித்தவன் - ஜேம்ஸ் பொண்ட் படத்தில் வரும் வில்லன்களைப் போல் வீட்டிலேயே முதலைகளை வளர்ப்பவன் - தமிழ் இளைஞர்களை உயிரோடோ அன்றி பிணமாகவோ அந்த முதலைகளுக்கு இரையாக்குபவன்!

இந்தக் கொடியவன் அதிபராக வருவதை இனி யாருமே தடுக்க முடியாது

இப்போது என் ஆத்திரமெல்லாம் இவனுக்குப் பக்கப் பாட்டுப் பாடி ஒத்துழைப்பு வழங்கும் தமிழர்கள் சிலர் மீதுதான்!

வடக்கில் உள்ள சில தமிழ் பத்திரிகை நிறுவன அதிபர்கள், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வர்த்தகம் நடத்தும் சில தமிழ் வர்த்தகப் புள்ளிகள் - இவர்களை நான் பெயரிட்டு எழுதப் போவதில்லை.

ஜனாதிபதி தேர்தல் முடியட்டும் பொறுங்கள். பெரிய எலும்புத் துண்டுகளை கோத்தபாய எசமான் இந்த துரோகிகளுக்கு வீசும்போது அவற்றை வாயில் கௌவிக் கொண்டு இந்த எச்சில் நாய்கள் பெருமை காட்டும்போது நீங்களே கண்டு கொள்வீர்கள்! ●

*wimalsockanathan@gmail.com*



# பாலைவனத்துப் பூக்கள்

"நான் தத்துவ ஞானியல்ல; ஆத்ம ஞானியுமல்ல;
நான் ஏழை. நான் ஏழைகளை நேசிக்கிறேன்".

- சுவாமி விவேகானந்தர்

இலண்டன் கனகதுர்க்கை அம்மன் அடியார்களின் நிதியுதவியில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில், மிக அண்மையில் அன்னை சாரதா மகளிர் இல்லம் திறந்து வைக்கப்பட்டது. இதில் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி தக்ஸபானந்த மகராஜ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அவர் பேசுகையில், "சாரதா அன்னையே தன் கணவர் இராமகிருஷ்ணருக்கு முதற்குருவாக அமைந்தார். புறந்தள்ளி வைக்கப்பட்ட பெண்களை, முன்தள்ளி வைத்தவர் அன்னை சாரதா. பெண்கள் எழுச்சிக்காக அன்னை சாரதா பாடுபட்டார்" என்று குறிப்பிட்டார்.

அன்னை சாரதா இல்லத் தலைவர் ஆசிரியர் சுதர்சன் உரையாற்றுகையில், "மக்கள் பலரை இழந்துவிட்டோம். யுத்தத்தில் உயிர் தப்பிய சிலர் இங்கே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே அடைக்கலம் புகுந்த 47 பெண்பிள்ளைகளைப் பராமரிப்புச் செய்யும் பொறுப்பை, கனகதுர்க்கை அம்மன் ஆலயம் அளிக்கும் நிதியுதவியில் நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். எனது தந்தையும் யுத்தத்தில் உடல் சிதறிப் பலியானவர்தான். இதனாலேதான் இப்படியான மகளிர் இல்லம் உருவாவதற்கு சிறியோனாகிய நான் பாடுபட்டேன். இரவு 12 மணிக்கும் எமக்கு தொலைப்பேசி அழைப்பு வருகிறது. பெற்றோரை இழந்த இரண்டு சிறுமிகளைப் பொறுப்பேற்க முடியுமா என்று பாடசாலை தலைமை ஆசிரியர் ஒருவர் கேட்டிருந்தார். எல்லாப் பிள்ளைகளுக்கும் நாம் அடைக்கலம் கொடுக்கப் பாரிய நிதி தேவைப்படுகிறது. கனகதுர்க்கையம்மன் ஆலய அடியார்களின் பணியைப் பாராட்டுகிறோம். இப்போது இங்கே நூறு இளம் சிறார்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கு மூலகாரணமாய் இருந்த திரு. சற்குணேஸ்வர் அவர்களைப் பாராட்டுகிறோம். அன்னை சாரதா இல்லத்திற்காக, நிரந்தர கட்டடம் அமையவுள்ள காணி ஒன்றை, இங்கே வந்திருக்கும் பிரதேச செயலாளர் பெற்றுத் தரவேண்டும்" என்று வேண்டுதல் விடுத்து, கேட்டுக் கொண்டார்.

இங்கு பேசிய சமூகத் தொண்டர் பிரதீஸ் அவர்கள் "யாருமற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு, முக்கியமாக உணவு, உடை என்பவற்றுடன் தங்குமிடமும் அத்தியாவசியம்" என்று சுட்டிக்காட்டினார். இங்கு சிற்றுரை ஆற்றும் போது, நாங்கள் இருவரும் வழங்கியுள்ள நிதியானது அம்மன் ஆலய அடியார்களின் காணிக்கையே என்பதை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டோம்.

கருநீலச் சட்டைகளை இல்லத்தின் சீருடையாக அணிந்திருந்த பெண்பிள்ளைகளை உற்றுநோக்கும் போது, மனம் மிகக் குழம்பியது. பலர் 12 வயது, 10 வயது என்று காணப்பட்டனர். அவர்கள் வாய்விட்டுச் சிரித்தாலும், அங்கே கலகலப்பில்லை. ஏக்கமான கண்கள் கதை பேசின. மிருகங்கள், பறவைகள் போன்றனவெல்லாம் குட்டி, குஞ்சுகளை அணைத்து வாழும் போது, எம்மைக் கட்டியணைக்க யாருமே இல்லையா என்று கேள்வி கேட்பது போல, அக்குழந்தைகளின் கண்கள் காணப்பட்டன. ஔவைப்பாட்டி, இன்று இருந்திருப்பின் "கொடிது, கொடிது வறுமை கொடிது..." என்பதுடன், 'மிகவும் கொடிது பெற்றோரில்லாப் பிள்ளைகள்' என்று நிச்சயம் பாடியிருப்பார். இந்தச் சின்னம் சிறுபிள்ளைகளுக்குத் தலைவாரிப் பூச்சூட்ட யாருமில்லை. கொளுத்தும் வெயிலில் இப்பிள்ளைகள் நிழலைத் தேடுகின்றார்கள். படித்துப் பட்டம் பெறுவதற்கு முன்னே சமூகம் கொடுத்திருக்கும் "அனாதை" என்ற பட்டம் இவர்களுக்கு. "வாடிய பயிரைக் கண்ட போது வாடினேன்" என்ற வள்ளலார் இன்று இருந்திருப்பின் இக்கொடுமைகளைக் கண்டு, தன்னுயிரை மாய்க்கும் நிலைமைக்கே சென்றிருப்பார். இந்தப் பாலைவனத்துப் பூக்கள் - மலர சமூகம் கைகொடுக்குமா?

அன்னை சாரதா இல்லத் திறப்பு விழாவில், இலண்டனில் இருந்து சென்ற அம்மன் அடியார்கள் திருவாளர்கள்

## அன்னை சாரதா மகளிர் இல்லம்

அருந்தவராசா, கேசவராசா, கெங்காதரன், திருமதி. விஜயபவன், திருமதிகள் சர்வா



ஜெய் ஜெயம், வைத்தியக் கலாநிதி ஆனந்தி, சிறீ மனோகரி ஆகியோர் ஒளித் தீபமேற்றியதுடன், விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அம்மன் கணினிப் பயிற்சி நிலையம்

"அன்ன சத்திரம் ஆலயம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவற்றினும் புண்ணியம் கோடி.
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்"
- மகாகவி பாரதி

காலை வேளை. மன்னார் மாவட்டத்தில் முள்ளிப்பள்ளம் என்ற இடத்தை அண்மிக்கிறோம். நேரம் தவறாது நீதியரசர், முன்னாள் முதலமைச்சர் திரு. விக்கினேஸ்வரன் அவர்களும் அழைப்பையேற்று அங்கே வந்திருந்தார். நல்லூர் ஆதீன முதல்வரும் வந்து சேர்ந்தார். தாயகத்தில் பலவித சமூகப் பணிகளை முன்னெடுத்துவரும் சிவனருள் இல்லத் தொண்டர்கள் எல்லோரையும் வரவேற்றனர். சிவனருள் இல்லத்தின் மணவர்கள் கல்வி விருத்திக்காக எட்டு கணினிக் கருவிகளை இலண்டன் கனக துர்க்கையம்மன் ஆலய அடியார்கள் சார்பாக காணிக்கையாகக் கையளிப்புச் செய்தோம்.

சிவனருள் இல்ல மாணாக்கரின் கலை நிகழ்வுகளுடன் விழா ஆரம்பமானது.

முன்னாள் முதல் அமைச்சர் திரு. விக்கினேஸ்வரன் பயிற்சி நிலைய



நாடாவை வெட்டி, திறந்து வைப்புச் செய்ததுடன் நீண்டதொரு உரையையும் ஆற்றியிருந்தார்.

"யாழ்ப்பாணத்தில் முன்னர் சமயப் பணியாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சமூகப் பணியையும் மேற்கொண்டு, பலரின் கல்விக் கண்கள் திறப்பதற்கு வழிகோலினார். அவ்வழியே, அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தற்போது இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயம், தாயகத்தில் இதுவரை பணிகள் பல மேற்கொண்டுள்ளனர். நேரகாலம் அறிந்து, இளையோரின் கல்விக்காக கணினிகள் பலவற்றை அம்மன் ஆலயம் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்காக வாங்கி, அளித்துள்ளனர். இதற்காக நான் அந்த ஆலயத்தின் சேவைகளைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிறேன்.

புலம்பெயர் சமூகம் தாயகப் பணிகளை முன்னெடுக்கும் போது, நடுவில் இருந்து பணம் பறிப்போர் கைகளுக்குச் செல்லவிடாதிருக்க வேண்டும். இந்த வகையில் இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் வெகுவாகச் சிந்தித்து, சரியான வழியில் மக்கள் பணத்தை, தகுதியான அமைப்புகள் கையில் வழங்குவது மிகவும் பாராட்டுக்குரியது" என்று உரையாற்றினார்.

மன்னார் அன்னை இல்லத் தொண்டர்களான திருவாளர்கள் இராமகிருஷ்ணன், பிருந்தாவனம் ஆகியோர் உட்பட, யாழ்ப்பாணப் பிரதேச சபையின் கல்விச் செயலாளர் திரு. இளங்கோவன், மன்னார் மாவட்டப் பணிப்பாளர் திருமதி. சிவசம்பு, டாக்டர் கங்காதரன் ஆகியோரும் இவ்வைபவத்தில் பங்கெடுத்து, உரையாற்றினர். திருவருள் இல்ல அறநெறிப் பாடசாலை மாணவர்களும், மன்னார் அன்னை இல்ல அறநெறிப் பாடசாலை மாணவர்களும் அங்கே குழுமியிருந்து, மிக ஆர்வத்துடன் கணினி இயந்திர இயக்கும் முறைகளை அவதானித்து, மகிழ்ந்தனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தின் சந்திக்கு அண்மையாக, முள்ளிப்பள்ளம் என்ற இடத்தே அமைந்துள்ள சிவனருள் நிலையக் கண்காணிப்பில் இப்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அன்பர் டாக்டர் நமசிவாயம் அவர்கள் சிவனருள் நிலைய இயக்குனராகவும், இவருக்கு ஒத்தாசையாக டாக்டர் கஜேந்திரா அவர்கள் உதவி இயக்குனராகவுமிருந்து, பல சமய, சமூகப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இலண்டன் கனகதுர்க்கை அம்மன் அடியார்கள் சிலரும் இக்கையளிப்பு விழாவில் கலந்து, வாழ்த்தினார்கள். ●

(அடுத்த இதழில் நிறைவுறும்)





Sky Wings Travel
25
Your Travel Is Our Passion...
Early Bird Offers
Call Us for Easter Special Offers
Book now and Pay Later. Hurry! Limited Availability.
WORLDWIDE SPECIALS
MELBOURNE Fr £588
AUCKLAND Fr £420
NEW YORK Fr £380
SYDNEY Fr £591
TORONTO Fr £344
CHENNAI Fr £377
TRICHY Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
SECURE YOUR BOOKING
WITH A DEPOSIT OF £150.00
SriLankan Airlines £506
Emirates £489
QATAR AIRWAYS £485
119 Tooting High Street, London, SW17 0SY
IATA
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
5766 ATOL PROTECTED

# World Tour Store

கொழும்பிற்கான சிறந்த பிரயாண
ஏற்பாடு செய்ய எம்மை நாடுங்கள்

**COLOMBO fr £452**

# BLACK FRIDAY SALE

**£10 OFF** ON FLIGHTS & HOLIDAYS

Simply Quote **"WTSBLK10"** T&C's Apply*

## Worldwide Flight Deals

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | fr £405 | Delhi | fr £369 | Toronto | fr £327 |
| Hyderabad | fr £431 | Goa | fr £491 | Bangkok | fr £358 |
| Kochi | fr £411 | Dubai | fr £289 | Singapore | fr £380 |
| Mumbai | fr £341 | Abu Dhabi | fr £294 | New York | fr £267 |

**Visit Our New Branch at WEMBLEY**

**Unit 3 A, Plaza Parade, 29-33, Ealing Road, Wembley, HA0 4YA.**

**& get Amazing Discounts.**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

**Lewisham:** 111b, Loampit Vale, Lewisham SE13 7TG

*Above fares & offers are subject to availability. T&C's Apply.



ப.வை. ஜெயபாலன்



# நெறிமுறை தவறும் தலைமுறை

"மன்மத லீலையை வென்றார் உண்டோ?" என்பது தியாகராஜ பாகவதர் கால சினிமாப் பாடலின் தொடக்க வரி. இதிகாச காலத்து காதல் களவியலில் இருந்து, வேலி மறைப்புக்குள் முறைக்கேடான உறவுகள் விருப்புக் கதைகள்கூட வெளிவராத வகையில் அமுக்கப்பட்டுவிட்டன. விடுதலைப் போராட்டம், இடம்பெயர்வு, புலம்பெயர்வு, முகவரி வழி பல நாட்டு முடுக்கு குறுக்குகளில் நீண்ட அகதிப் பயணங்கள் என்பன பரவலாக காதல், காமம், கல்யாணம், திருமண முறிவுகள், காத்திருந்தவன் பெண்டிலை நேற்று வந்தவன் கொண்டு போன கதைகள் என பலதுக்கும் வழிவகுத்துவிட்டன.

சிறுவன், சிறுமிகள், வாலைப் பருவ இளசுகள், நடுத்தர வயதினர், மூத்தோர் என மன்மதனின் பாணங்களுக்கு இரையாவோர் பருவங்களும், பதவி, பொறுப்பு என்ற பெருமைகள் ஆச்சரியப்பட வைக்கும் கதைகள் ஆயிரம் ஆயிரமாக அதிகரிக்கின்றன.

புலம்பெயர் வாழ்வில் வாழ்க்கை செலவைக் குறைக்க ஒரே வீட்டில் இரு குடும்பங்கள் வாழ்வது அல்லது இளம் ஆண்கள், பெண்களை வாடகைக்கு வீட்டில் தங்க வைப்பது, வேலை தல இரவுக் கொண்டாட்டங்களில் வெறியேறி மதிமங்குவது என்பன நெறிமுறை தவறி காமங்களால் குடும்பங்கள் பிரிந்து சீரழிய காரணங்களாகி விடுகின்றன.

மனைவி நோயாளி என தெரிந்தும் மனம் பதித்துவிட்ட காரணத்தால் அவளை இலண்டனுக்கு அழைத்து மணம்புரிந்த ஒரு நல்லவன், அவன் பெத்து தந்துவிட்டு இறந்து போக, அந்த பெண் மகவை தனியாளாக வளர்க்கிறான். இன்னொரு மணம் செய்தால் என் மகளை அவன் எப்படி வளர்ப்பாளோ என்ற பயம். பத்து ஆண்டுகள் தொடர்ந்தது அந்த மகளை தனி தாயுமானவனாகி வளர்க்கும் இளைஞனின் தவம்.

கார் பழகும் ஆசை வந்தது. கற்றுத்தர வந்தவள் இரு பிள்ளைக்குத் தாயான ஒரு மொறிசியஸ் மாது. கற்றுத்தர வந்தவளோடு பற்றிக் கொண்டது காதல். கடமையின் எல்லை இப்போது மகளோடு இல்லை. அந்த இரண்டு மொறிசியஸ் பிள்ளைகளுக்கும் தாய் இல்லை. இன்னொரு ஐரோப்பிய நாட்டுக்கு இடம்பெயர்ந்து இந்த ஜோடிகள் புதுக்குடித்தனம். இது சென்ற மாதம் நடந்த எம் தமிழர் சங்கதியில் ஒன்று.

போராலே புலம்பெயர்வு ஆரம்பமாகி 35 ஆண்டுகள் வரை ஆகின்றன.

மரபுநெறி மாறாத வன்னிக் கிராமம் ஒன்றில் இருந்து மைத்துனனை மணம்புரிய இருதரப்பு பெற்றோராலும் இலண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள் ஒரு மங்கை. அவனுக்கு மைத்துனியிடம் கொள்ளை ஆசை. ஐந்து நண்பர்களுடன் அறை ஒன்றில் இருந்தவன் புது வாழ்வு தொடங்க மாடி வீடு ஒன்றில் மூன்று பிள்ளைகளுடன் வாழும் குடும்பத்தின் கீழ்தள அறையை வாடகைக்கு எடுத்தான். அகதியாக மனைவி வந்து சேர ஆறு வாரங்கள் தாமதம். அந்த கால இடைவெளிக்குள் மாடி வீட்டுத் தாய்க்கும் இந்த புதுமணமகனுக்கும் தகாத உறவு. கணவன் இரவு வேலை. இவனுக்கு இரவு பத்து மணிவரை வேலை. பின் இரவு எல்லாம் இவர்களுக்கு நல் உறவு வேளை. வந்த மறுநாளே சங்கதியை அறிந்து விடுகிறாள் அந்த மைத்துனி. வேறு வீடு எடு என்றால், அவன் மறுத்தான். அமெரிக்காவில் இருக்கும் தன் அண்ணனுக்கு சங்கதியை தொலைப்பேசியில் சொன்னாள் அந்தப் பெண். மறுநாளே இந்த கள்ளத் தம்பதிகள் மாயமாக, காணாமல் போய்விட்டனர். இருநாட்கள் கழிய அடியாட்களுடன் வந்து தாலிக் கொடியை கொடுத்துவிட்டு தன் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தன் இளம் காதலனுடன் தனிக்குடித்தனம் போய்விட்டாள் அந்தப் பெண். மைத்துனிக்கு அடைக்கலம் அளித்தவர்கள் நல்ல திருமணத்தையும் செய்து வைத்தார்கள். எட்டு வருடங்களுக்கு முன்னைய நிகழ்வு. இன்னும் அவன் அந்த பெறாப் பிள்ளைகளுக்குத் தகப்பன். ஓடிவந்த தாய்க்கு கணவன். மண்விட்டு வந்து கொண்ட கண் கெட்ட காதல்.

சுவாரசியமான சுனாமி கால காதல் ஒன்று நோர்வேயில் நடந்த நிகழ்வு. சுனாமி அவலத்தில் இலங்கையில் தாய் தந்தையை இழந்து தவிக்கும் சிறுமியை பார்க்கப் போனார்கள் ஒரு உறவுக்கார தம்பதிகள். அவலத்தை பார்த்து அவளை அகதியாக நோர்வேக்கு அழைத்தார்கள். தங்களுடன் பிள்ளைகளில் ஒன்றாக வளர்த்தார்கள். பருவம் ஏற அவள் பழக்கம் மாறியது. கண்டிப்புக்கூட அவள் தனியனாக அறை எடுத்து வாழ ஆரம்பித்தாள். ஆண், பெண் நட்புகளுடன் இரவு இரவாக குடி, கும்மாளம் என்று கொண்டாட்டம். அழைத்த போது முகவருக்குக் கொடுத்த கடனில் தவித்த தம்பதிகள், அழைத்த காசை தரும்படி கேட்டார்கள்; வற்புறுத்தினார்கள். அவளோ தன்னை அவர்கள் அகதியாக வற்புறுத்தி அழைத்து வந்து வேலை வாங்கி கொடுமைப் படுத்தியதாகவும் தான் விலகி வந்து வாழ, வீடு தேடி வந்து பணம் கேட்டு மிரட்டுவதாகவும் பொலிஸில் புகார் கொடுத்தாள். நல்லது செய்த தம்பதிகளுக்கு அவள் தந்த பிரதி உபகாரம் சிறைவாசம். வழக்கு நடந்தது. இலங்கைக்கு சென்று வற்புறுத்தி அழைத்து கடத்தி வந்த குற்றச்சாட்டை விசாரித்த நோர்வே போலீசாரின் விசாரணையின்பின் தம்பதிகள் விடுவிக்கப்பட்டார்கள். பண்பாடு



தவறிய எம்பாடு பலரும் படுவது பெரும்பாடு.

புலம்பெயர் அந்நிய வாழ்வு, போகம் அனுபவிப்பதில் மோகம் கொண்ட அந்நிய கலாசாரம், அந்தக் கலாசார கலப்பில் எம் தமிழ் இளைஞர் யுவதிகள் "வீற்ஸ்" என்ற கஞ்சாப் போதை பாவனை சர்வ சாதாரணம். இவை குடி கும்மாளம் பதினாறு வயதளவிலேயே ஆரம்பம். சொன்னால் வெட்கம், சொல்லாவிட்டால் துக்கம் என்ற இருதலைக்கொள்ளி எறும்பாகப் பெற்றோர்.

"மொழி எங்கள் விழி" என்று அழியும் மொழிக்காக ஆயுதம் ஏந்தி போராடிய ஆயிரம் ஆயிரம் இளைஞர், யுவதிகளைக் கண்டது எம்தாய் நிலம். இன்று இங்கு மட்டுமல்ல, அங்கும்தான் அழியும் பண்பாடு, மொழி, கலாசாரம் சந்ததிகள் அந்நியங்களோடு இல்லறம் காணும் சங்கதிகள் என ஆயிரம் ஆயிரம் அவலங்கள். 1972-இல் தமிழ் இனத்தை இனி ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டுமென்றார் தந்தை செல்வா ஆண்டவன் காப்பாற்றுவாரா?. ●

## தடம் மாறிச் செல்லும் யாழ், இளைய சந்ததி!

பெண்களின் சுதந்தரம் பற்றி கவிஞன் கண்ட கனவு யாழ்ப்பாணத்தில் சில காலம் நடந்தது. நள்ளிரவில் நடுவீதியில் பயணி தமிழ் பெண்கள் நடந்து திரிந்தார்கள். இன்று அந்த மண்ணில் என்ன நடக்கிறது?

சமீபத்தில் அம்பலத்துக்கு வந்த சம்பவமொன்றைச் சொல்கிறேன்.

19 வயது முஸ்லிம் இளைஞர், 15 வயது பள்ளி மாணவி குடும்பம் நடத்தியிருக்கிறார்கள். காதலித்து வந்த இவர்கள், அந்தப் பெண்ணின் உறவினர் வீட்டுக்கு காதலனுடன் சென்று முழுநேரத் 'தனிக்குடித்தனம்' நடத்தியிருக்கிறாள். இவர்களுக்குக் கைக்குழந்தையும் இருக்கிறதாம். விளக்க மறியலில் இளம் கணவன் மனைவி வைக்கப்பட்டுள்ளனர். யாழ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு உடந்தையாக இருந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



யாழ்ப்பாண இளம் சந்ததி எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்!

## ஈழத்தமிழ் ஊடகவியலாளர் படுகொலை நினைவுநாள்

ஈழ தமிழ் ஊடகவியலாளர் படுகொலை நினைவு நாள் 19-10-2010 அன்று பாரிஸ் நகரில் அனுஷ்டிக்கப்பட்டது.



லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள்› சித்திரவதைகள்› கைதுகள்› ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு› மற்றும் இன்றைய தமிழ் அரசியலும் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலைப்பாடு ம் ஆகிய தொனிப்பெருளில் சிறப்புரைகளும் கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன.

ஈழத்தில் மிகவும் ஆபத்தான காலகட்டத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றி சொல்லொணாச் சித்திரவதைகளை அனுபவித்து உயிர்தப்பி தற்போது சுவிஸ் நாட்டில் தஞ்சமடைந்திருக்கும் ஊடகவியலாளர் திரு. ஞானசுந்தரம் குகநாதனின் சேவையைப் பாராட்டிய சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இந்த விழாவில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளது.






**மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர்.தியாகராஜன்**


# GAS 'TRIC'

'காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!' -என்பது நம் ஊண் உடல் எங்கும் வியாபித்திருக்கும் வாயு (GAS) பகவானின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. 'நீர்க்குமிழி போன்றது வாழ்க்கை' என்பது குமிழில் அடைக்கப்பட்டிருக்கும் வாயு பகவானையும், குமிழ் உடைந்தால் - வளிமண்டலத்துடன் இரண்டறக் கலந்துவிடும் நமது வாழ்வின் நிலையற்றத் தன்மையையும் குறிப்பிடுவது. 'காற்றுக்கு என்ன வேலி' என்பது வாயு பகவானின் எல்லையற்ற தன்மையையும், அங்கு இங்கு என்றில்லாமல், எங்கெங்கும் ஓடித்திரியும் தனித்துவமான குணநலன்களைக் குறிப்பிடுவது. கடந்த 35 வருட கால என்னுடைய மருத்துவ சேவை அனுபவத்தில், என்னைச் சந்தித்த நோயாளிகளில் பெரும்பாலோர் தமக்கு 'காஸ்றிக்' பிரச்சனை இருப்பதாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். 'காஸ்றிக்' என்ற வார்த்தை அவர்களால் ஏப்பம் (Belching Burp), நெஞ்சு எரிவு (Acid Reflus), வயிறு இரைச்சல் (Rumbling Abdomen) போன்ற பிரச்சனைகைளக் குறிப்பிடவும், சில நேரங்களில் அபானவாயு (Flatus) போன்ற பிரச்சனைகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. மேலதிக விபரம் அவர்களிடம் கேட்டால் மேற்குறிப்பிட்ட நான்கு பிரச்சனைகளில் ஏதேகும் ஒன்றோ, இரண்டோ அல்லது நான்குமே கூட அவர்களைச் சிரமப்படுத்திக் கொண்டிருப்பதை அறியமுடிந்தது. எல்லா வாயுப் பிரச்சனைகளும் ஒன்றுபோலத் தோன்றினாலும், ஒவ்வொன்றும் வித்தியாசமானது. விதவிதமான குணாதிசயங்கள் கொண்டவை. ஒவ்வொன்றுக்கும் காரணங்கள் வெவ்வேறானவை. வானிலை மாற்றம், சூறாவளிக் காற்று போன்று நேலகாலமின்றித் திடீரெனத் தாக்கும் தன்மையுடையவை. கணிக்க முடியாத திருவிளையாடலும், குழப்பமும் உண்டாக்கக் கூடியவை. பெரும் தைரியசாலியைக் கூட 'காஸ்றிக்' மனதளவில் நிலைகுலையச் செய்துவிடும். மரண பயத்தை உண்டாக்கிவிடும். காஸ் - வாயு - பிராணன் நம் உடலுக்கும், உயிர் வாழ்வதற்கும் மிக மிக அவசியம். அளவோடு இருந்தால் ஆனந்தம். மிகுதி ஆகிப்போனால் அவலம்தான் மிஞ்சும். ஜீரண மண்டலத்தில் (Digestive System) வாயு மிக மிக அவசியமானது. செமிபாட்டுப் பாதையில் - குடல் பகுதியின் அசைவை (Peristaltic Movement) வாயுதான் தீர்மானிக்கின்றது. மேல் வயிற்றிலிருந்து மலக்குடலை நோக்கிச் செல்லும் உணவுப் பொருளின் உந்துசக்தியாக வாயு பெரும் பணியாற்றுகிறது. வாயு உந்து சக்தியால்தான் மலம் கழித்தல் என்னும் முக்கியப் பணி நடைபெறுகின்றது. வாயு இல்லையேல் மலம் வெளியேறாது. மலச் சிக்கலும், உடல் சிரமமும் வாழ்க்கைப் பிரச்சனையும் உண்டாகிவிடும். வாயு வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானது.



அத்தியாவசியமான வாயுவே கூடிப்போனால் துன்பமாகிவிடுகின்றது.

1. ஏப்பம், 2. நெஞ்சு எரிவு, 3. வயிறு இரைச்சல், 4. அபான வாயு போன்ற நோய்க்குறிகளை உருவாக்கி நமக்கு அதிர்ச்சி ஊட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட நோய்க்குறிகளைவிட (Symptoms) அதனால் உண்டான குழப்பமும், பயமும், அமைதியின்மையும் உடலின் அமில சுரப்பை அதிகப்படுத்தி (Hyper Acidity) மீண்டும் மீண்டும் வாயுக் குழப்பத்தை (Gas'tric) உண்டாக்கி நிரந்தர நோயாளியாக்கிவிடுகின்றது.



காரணம் என்ன? விளங்கிக் கொண்டார் குழப்பம் தெளியும்; அமைதி உண்டாகும்; ஆரோக்கியம் மீண்டெழும்!

### என்ன காரணம்?

### 1. ஏப்பம் (Belching)

வயிற்றின் மேல் பகுதியில் பொதுவாக வாய் வழியாக வெளியேறுவது ஏப்பம் என்று குறிப்பிடப்படும். பெரும்பாலும்



உணவோ, நீராகாரமோ உட்கொண்ட பதினைந்து நிமிடங்களுக்குள் ஏப்பம் வந்துவிடும். குழந்தைகள் பால் குடிக்கும் போதும், பெரியவர்கள் ஆகாரம் உட்கொள்ளும் போதும் காற்றையும் சேர்த்து உட்கொள்ளும் (Aerophagia) வாய்ப்பு உள்ளது. உணவோடு உட்கொள்ளும் காற்று பெரும்பாலும் வாய் வழியாகவே ஏப்பமாக வெளியேறிவிடும். நவீன காலத்தில் நாகரிகமாக நாம் அருந்தும் வாயு நிரப்பப்பட்ட குளிர்பானங்களும் (Aerated Soft Drink and Sparakling Water) போன்றவைகளும், ஏப்பம் ஏற்பட பெரிதும் துணைபுரிகின்றன. சிலருக்கு அமைதியாகவும், பலருக்கு ஆரவாரமாகவும் (Loudnoisy) ஏப்பம் வெளியேறும். வெளியேறத் திணறும் 'வாயு குமிழின்' அழுத்தத்தினால் மார்புப் பகுதியில் உண்டாகும் அவஸ்த்தையைப் போக்க சோடா நீர் (Soda Water), ஜின்ஜர் பியர் (Ginger Beer) அருந்துவதும் நடைமுறை வழக்கம் சுகமாக வெளியேறும் ஏப்பத்தினால், அன்பரைவிட - அருகில் இருப்பவருக்குச் சிரமம். தடைப்பட்ட ஏப்பத்தினால், மார்புப் பகுதியில் அழுத்தம் உண்டாகி, 'மாரடைப்போ' என்ற பீதி ஏற்படும். வாயு வெளியேறினால் வாழ்க்கை தொடரும்.



### 2. நெஞ்சு எரிவு (Acid Reflux)

பாவம் செய்பவர்கள் நரகத்துக்குச் செல்வார்கள்; கொப்பறையில் கொதிக்கும் எண்ணெய்யில் தள்ளப்படுவார்கள்; மீண்டும் வெளியே வரமுடியாது; இது புராணக்கதை. கற்பனை பண்ணிப் பாருங்கள். காட்சிப்படுத்திக் களியுங்கள்! நாம் உண்ணும் உணவும் - உணவுக் குழாயில் பயணம் செய்து, கொதிக்கும் அமிலம் நிறைந்திருக்கும் வயிற்றில் (Stomach) விழுந்தவுடன் கதவு (Diaphramatic Valve) மூடிக் கொள்ளும். வயிற்றுக்குள் சென்று அமிலத்தில் கலந்த உணவு மேல நோக்கி உணவு குழாய்க்கு மீண்டும் வரக்கூடாது. Valve, இறுக மூடாவிட்டால், வாயு உதவியுடன் அமிலம் கலந்த உணவு பதார்த்தம் உணவுக் குழாயின் வழியாக மேல்நோக்கி விசிறி எழும்பி வாய்க்கு (Mouth) வரும். சமையலறை அடுப்பின் நெருப்பு, வாசலுக்கு வரக்கூடாது. கவனக்குறைவினால் அடுப்பின் நெருப்பு வாசலுக்கு வந்தால் விபரீதத்தை உண்டாக்கும். சமையலறை போன்ற வயிற்றில் (Stomach) நெருப்புப் போன்று இருக்கும் அமிலம், உணவுக் குழாய்க்குள் மேல் நோக்கிப் பாய்ந்தால், நெஞ்சு எரிவு (Heart Burn - Acid Reflux) உண்டாகும். மருத்துவ ரீதியாக இதுவே Gastritis என்று சொல்லப்படும், இரவு நேரங்களில் வயிறு நிரம்ப உணவு அருந்திவிட்டு (Tummy Full) உடனடியாக சரிந்து படுப்பதால், Valve விரிவடைந்து, அமிலமும் உணவும் உணவுக் குழாயில் மேலெழும்பி எரிச்சலும், அவஸ்த்தையும் உண்டாகும். நாளடைவில் Valve பலகீனமடைந்து, சரியாக மூடாது, உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டிருக்கும்போதோ கூட நெஞ்சு எரிவு உண்டாகும். அடிக்கடி பாயும் அமிலத்தினால், உணவுக் குழாயில் வீக்கமும், சேதமும், புண்களும் (Ulcer) ஏற்படும்.

மசாலாப் பொருட்கள் மிகுதியாகச் சேர்க்கப்பட்டகாரம் மிகுந்த உணவுப் பொருட்கள் (Spicy Food), எண்ணெய்யில் பொரிக்கப்பட்ட உணவு (Oil Fryed Food), குளிர்பானங்கள் (Fizy Drink) போன்றவை வயிற்றில் அமிலத்துடன் சேர்ந்து நெஞ்சு எரிவை உரமாக்கி பீதியை உண்டாக்கும். சாகச காட்சிகளில் (Magic Show) வாயில் பெட்ரோலை உமிழ்ந்து நெருப்பை விசிறியடிக்கும் (Blowing Fire) மயிர்க்கூச்செறியும் உணர்வுடன் நெஞ்சு எரிவை ஒப்பிடலாம்.

### 3. வயிறு இரைச்சல் (Rumbling Abdomen)

நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும் என்பது பழமொழி. வயிறு நிறைந்தால் திருப்தி உண்டாகும். பசித்த வயிறு ஆர்ப்பரிக்கும். குறிப்பிட்ட நேரத்தில் பசி உணர்வு உண்டாகி வயிறு உணவின் வருகைக்காகத் தயாராக இருக்கும். உணவின் வருகை தாமதமானால், வாயு உண்டாகி, இரைச்சல் ஏற்படும். கலகலப்பாக இருக்கும். வாயுவின் இரைச்சல் வயிறெங்கும் எதிரொலிக்கும். சில நேரங்களில் அருகில் இருப்பவரும் கேட்டு ரசிக்கலாம். தாமதமாகி உணவு உண்பதால், உணவும் வாயுவும் ஒன்றுகூடி வயிற்றில் பேரழுத்தத்தையும், பாரத்தையும் (Pressure and Heavy Tummy) உருவாகும். வயிறு அந்தரப்படும். செமிபாடு சீர்குலையும். சரியான நேரத்துக்கு அளவான உணவு உண்பது வயிற்றில் உண்டாகும் இரைச்சலை அமைதிப்படுத்தும்.

### 4. அபான வாயு (Flatus)

செமிப்பட்ட உணவின், கழிவுப் பொருட்கள் மலக்குடலில் தங்கி, மல வாசல் வழியாக வெளியேற அபான வாயுவின் உந்துசக்தி (Flatus Force) மிக மிக அவசியம். சில நேரம் கழிவுப் பொருட்களின் தன்மையைப் பொறுத்து அபான வாயுவின் மணம் மாறி - துர்மணம் (Bad Order Flatus) வீசும். உண்ணும் உணவின் தன்மையைப் பொறுத்து அபான வாயுவின் அளவும் மணமும் மேலும் மாறுபடும். பாதுகாக்கப்பட்ட உணவுப் பதார்த்தம் சமைத்து நாள்பட்ட உணவு அபான வாயு உற்பத்தியை அதிகரிக்கும். மாமிச உணவு பதார்த்தங்கள் அபான வாயுவின் மணத்துக்கு மணம் சேர்க்கும். சில நேரங்களில் அபான வாயு அதிக சத்தத்துடனும் வெளியேறக்கூடும். நம் உடலுக்கு, இசைவான புதிதாகச் சமைக்கப்பட்ட உணவுப் பொருட்களை சரியான அளவில், குறித்த நேரத்தில் உண்ணுவதன் மூலம் அபான வாயுவின் அளவையும், குணத்தையும், ஆற்றலையும் நெறிப்படுத்தலாம். அமிர்தம் போன்ற உணவும், அமைதியான மனமும், ஆழ்ந்த நித்திரையும் இதனுடன் இணைந்த பாதுகாப்பான பக்கவிளைவுகளற்ற ஹோமியோபதி சிகிச்சை அனைத்துவிதமான Gastric பிரச்சனைகளை முறியடித்து புயலாகச் சீரும் 'வாயு பகவானை' அமைதியாக்கித் தென்றலாகத் தவழவிடலாம். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**



மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை
MRT
Menstrual Regulation Treatment
ESTRADIOL
ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation
ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects
அதீத ரத்தப்போக்கு
Over Bleeding
கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility
Normal ovary
Polycystic ovary
PCOD
சினைப்பை நீர் கட்டி
சிறப்பு சிகிச்சைகள்
பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்
34%
70%
பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Infertility)
டயபட்டிஸ் (Diabetes)
உடல் எடை அதிகரித்தல்
Obesity
முகப்பரு
Pimples
தலைவலி
Headache
சரியான தூக்கமின்மை
Sleepless
முடிகொட்டுதல்
Hair Fall
உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை
HOMOEO CARE
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
0044 7833341693
homoeocare
www.homoeocare.com
homoeocare@rediffmail.com

நாக சிறிகெங்காதரன்

# இரசிகர்களை மகிழ்வித்த 'மகாஜனாவின்' இசை நிகழ்ச்சிகள்






அக்டோபர் மாதம் 12ம் திகதி லூயிசம் சிவன மண்டபத்திலும் 13ம் திகதி ஆர்ச்வே முருகன் ஆலய மண்டபத்திலும் இடம்பெற்ற பூசணி கல்யாணராமனின் இன்னிசைக் கச்சேரி சமீபகாலத்தில் லண்டனில் இடம்பெற்ற சிறந்த கச்சேரிகளில் ஒன்றாக இருந்தது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால், அதனது காப்பாளர் வைத்திய கலாநிதி சீ நவரத்தினம் அவர்களின் தலைமையிலான காலச்சாரக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இரண்டு நிகழ்ச்சிகளும் அழகாகவும் சிறப்பாகவும் ஒழுங்கு படுத்துப்பட்டிருந்- தமையை அவதானிக்க முடிந்தது. இலங்கையிலுள்ள தமிழப் பாடசாலைகளில் இலக்கியத்திலும் கலையிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கிய பெருமை மகாஜனக் கல்லூரிக்கு உண்டென்பது சரித்திரம். கல்லூரியின் புகழுக்கு மேலும் மெருகூட்டுவது போலவே இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் பார்த்தவர்கள் சொன்னதை அவதானிக்க முடிந்தது.

இரண்டு நாள் அரங்குகளும் கல்லூரியின் ஆரம்பகால நாடக ஆசான் அமரர் நவாலியூர் செல்லத்துரை அவர்களின் பெயரைத் தாங்கி நின்றது. எமது மண்ணில் மரணித்தவர்களுக்காக ஆரம்பத்தில் மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது. பிரதம விருந்தினர்களின் பாரியார்கள் மங்கள விளக்கேற்ற அரங்கிலிருந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் மேடைக்கு வந்து கல்லூரிக் கீதத்தை அழகுற இசைத்தமை சிறப்பாக இருந்தது. வரவேற்புரைகளைத் தொடர்ந்து, இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



முதல் நிகழ்வாக மகாஜன பழைய மாணவரின் மகள் செல்வி தக்சா சேயோனின் வாய்ப் பாட்டு இன்னிசை நிகழ்வு நடைபெற்றது. பூசணி கல்யாணராமனின் கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசிக்க வந்திருந்த பிரபல கலைஞர்களின் பக்கவாத்தியங்கள் துணைநிற்க இளம் கலைஞர் தக்சா வின் கம்பீரமான குரலும் அழகான தோற்றமும் இரசிகர்களை கட்டிப்போடச் செய்தது. நிகழ்ச்சி இளம் கலைஞரின் சிறப்பான எதிர்காலத்தை எமக்குப் புரிய வைத்தது.

இரண்டாம் நாள் 'மகாஜன மாலை; நிகழ்வில் எம்மவர்களான இளம் கலைஞர்கள் - மாதங்கி உதயகுமார், சாம்பவி உதயகுமார் சகோதரிகளின் வயலின் கச்சேரி ஆரம்ப நிகழ்வாக இடம்பெற்றது. முதல்நாளின் இளம் கலைஞரைப் போலவே இந்த நிகழ்வும் சிறப்பாக இருந்தது. இளம் கலைஞர்களை தட்டிக்கொடுத்து கைதூக்கிவிடும் மகாஜன பழைய மாணவர்களைப் பாராட்டவேண்டும்.

தமிழகத்தில் பிரபல்யமான கர்நாடக இசைக்கலைஞரான கலைமாமணி, இசைப்பேரரசி, திருமதி பூசணி கல்யாணராமன் அவர்கள் எமது மண்ணின் முத்து. வடஈழத்;தின் வேலணையைச் சேர்ந்தவரன இவர் தனது திறமையாலும் குரல்வளத்தாலும் தென்னிந்தியாவின் சிறந்த கலைஞராக கடந்த பலவருடங்களாக வலம் வருகிறார். கச்சேரி மிகச்சிறப்பாக இருந்தது. இருபது வருடங்குளுக்கு முன்னர் லண்டனில் இவரது கச்சேரியை கேட்டவர்கள், இவ்வளவு நீண்ட காலத்தின் பின்னரும், குரல்வளம் குறையாத பூசணியின் கச்சேரியை மெய்மறந்து ரசித்தமை எம்மவர்க்குப் பெருமைசேர்க்கும் நிகழ்வாகும்.

இரண்டு நிகழ்வுகளிலும் தரமான கலைஞர்களான, ஸ்ரீ பாலரகுராமனின் வயலினும் பாலசந்தரின் மிருதங்கமும் கச்சேரியின் தரத்தை உயர்த்தின. இளம் கலைஞகளான அபிராம் சகாதேவன் (கடம்) கபிலன் மருதராஜா (கஞ்சிரா), தனுசன் சந்திரகுமார் (மோர்சிங்) ஆகியோரின் பக்கவாத்தியங்கள் இளம்கலைஞர்களாகவே அவர்களை நினைக்க முடியவில்லை. அவ்வளவு அற்புதமாக வாசித்தார்கள்.

முதல் நாள் நிகழ்வுக்கு ஈழத்தமிழர்களுக்கு இங்கும் பெருமை சேர்த்த பேராசிரியர் சேர், சபாரத்தினம் அருள்குமரன் அவர்கள் தனது பாரியாருடன் வந்து கௌரவப்படுத்தினார். மகாஜனக் கல்லூரியின் பெருமைதந்த சேர் அருள்குமரன் 'மகாஜனா கல்வியுடன் வாழ்க்கைக்குத் தேவையான சகலதையும் தனக்கும் ஏனைய மாணவர்களுக்கும் தந்ததாகவும் அன்றைய அதிபரையும் தனது பெறுமதிமிக்க ஆசிரியர்களையும்; நன்றியுடன் நினைத்துத் தனது உரையை ஆற்றினார்.

இரண்டாம்நாள் நிகழ்வுக்கு மகாஜனாவுக்குப் பெருமை தந்த பழைய மாணவரான வைத்திய கலாநிதி பூபாலசிங்கம் அவர்கள்பிரதம விருந்தினராக தனது மனைவியுடன் கலந்து சிறப்பித்தார். மகாஜனாவின் ஆரம்பகாலத்தில் வைத்தியத் துறைக்குத் தெரிவாகி கல்லூரிக்குப் பெருமையையும் அதனது கல்வித்துறையை எல்லோரும் திரும்பிப்பார்க்க வைத்தவர்களில் ஒருவராகவும் அறிமுகம் செய்தவர் வர்ணித்தார். மகாஜனாவின் ஆரம்பகால வளர்ச்சியைப் பெருமையுடன் குறிப்பிட்ட பிரதம விருந்தினர் கல்லூரியின் கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகால வளர்ச்சியில் லண்டன் பழைய மாணவர்கள் ஆற்றிய பங்களிப்பை குறிப்பிட்டு தொடக்கத்திலிருந்து தன்னுடைய பங்களிப்பையும் பெருமையுடன் குறிப்பிட்டார்.

தரமான இரண்டு நிகழ்ச்சிகளைப் பார்த்த நிறைவை இரசிகர்களுக்கு இவை தந்தன. ●









பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES UK
2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX | Contact: Tel: 0208 527 3819 | Mob: 07956 919 511
பெருமையுடன் வழங்கும் இந்தாண்டு முதல் முதலாக
Thiveega Gana Utsavam
2019
தெய்வீக கான உற்சவம்
தெய்வீக கான இசை விழா
Super Singer: Rajaganapathy
Zee Tamil Winner: Varsha
இந்நிகழ்வுகள் ஓர் இசை விழாவாகவே இடம்பெறும்.
இந்நிகழ்வில் இங்கிலாந்தில் வாழும் இளம் கலைஞர்களும், தமிழகத்திலிருந்து வாய்ப்பாட்டு கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
FREE ENTRY
DECEMBER
08
SUNDAY
09.00 am - 9.00 pm
உயர்வாசற் குன்று முருகன் ஆலயம்,
200 Highgate Murugan Temple N6 5BA
கர்நாடக சங்கீதமும், பக்திப் பாடல்களும் சங்கமமாகும் ஓர் அற்புதமான இசை நிகழ்ச்சி காணத்தவறாதீர்கள்
தொடர்புகளுக்கு: 0750 034 8132, 0795 685 4075, 0795 691 9511, 0741 135 4315




ENGINE TEC MOTORS
we offer Facilities for
Servicing
Clutches
Brakes
Overhauls
Car Electricals
Pre - MOT Checks
ALL Types of Repair & Body Work
Insurance Work Undertaken
என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்
Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945
Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com
Fiesta
Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE
தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

டாக்டர். என்.ஜெகநாதன்



# அன்பே சாந்தி



கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் மெய்யென்றல்ல, தீர விசாரித்து அறிவதையே மெய்யென ஏற்கலாம். உன் கண் உன்னை ஏமாற்றிவிடலாம். செவிக்கு எட்டுவது வதந்தியாகிவிடலாம் எமக்குப் புலனாகும் அர்த்தம் யதார்த்தமற்றதானால் நாம் புரிந்து/விளங்கிக் கொண்டது வீண்தான். புலன் விசாரணை என்பது மெய்மை காப்பதாகும்.

கண்கள், செவிகளின் இயக்கம் கருவிகளினதை ஒத்தது. அவை நலமிழந்தால் பார்வையும், கேட்பதும் தவறாகலாம். எதுவும் புரிந்துகொள்ளப்படுவதற்கு அது பற்றிய அறிவு ஓரளவிற்கு இருத்தல் வேண்டும். அது ஏற்கெனவே மூளையில் பதிவாகிவிட்ட தகவல்களின் அடிப்படையில் அமைவதே. இல்லையேல் அந்த அனுபவம் புதிது/புதுமையானதாகும். புரிந்து கொள்வதற்கு மனம் பொறுப்பானது என ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இந்த மன/புரிந்துணர்வாக்கம் எமது மனக்கண்ணோட்டம், உள்பார்வை (*Insight*) ஆவதே. அறிவாற்றல் திறன்/விவேகம் (*Wisdom*) அதில் பங்கேற்றுவதால் அறிவுணர்வாக்கம் (*Awareness*) என்பதாகவும் அதை கருதலாம். அறிவுக்கெட்டியவரை எனக் குறிப்பிடுவதும் இதைத்தான். மனம் சமநிலையிழந்தால் அது தடைப்பட்டுவிடும்.

விழிப்புணர்வு (*Wakefulness*), நினைவுணர்வு (*Consciousness*) எடன்ற சொற்கள் வேரான கருத்தானவை. தூக்கக் கலக்கம் விழிப்புணர்வு நிலையையும், களைப்பு அல்லது பசி/மது மயக்கம் நினைவுணர்வு நிலையையும் குறைப்பதான உதாரணங்கள் இவற்றை குறிப்பன.

விளங்கிக் கொள்வது தவறுவதற்கு/முடியாமைக்கு அறிவு வளராதது அல்லது குறைவாக நிலைத்து (*Mental Retardation*) விட்டது காரணமாகலாம். சிறுவயதில் அல்லது மனவயதுக் குறைவினால் மனம் முதிர்ச்சி அடையவில்லை என்பதாக இதைக் கருதுகிறோம்.

மனம் தயாராக அல்லது உஷாராக இல்லாவிடில் அறிவுணர்வு உச்சமாகாது. ‘நாய்/திருடர் கவனம்’ என்ற முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் அறிவுணர்வைத் தூண்டிவிட உத்தேசிப்பன.

அறிவுணர்வில் எச்சரிக்கை கொள்வது மாயையை தவிர்க்க வழியாகும். அது மூடி/தடுத்து (*closed*) விடப்பட்டதாகவல்லாமல், விரிவாக்கப்படக் கூடியதாக (*Open*) அமைய வேண்டும். மூடுதல் நம்பிக்கை ஆகிவிடும். போலி நகையை அசல் என நம்பிவிட்டால் அது மாயையாகும். நகல் ஆகவிருக்கக்கூடும். பரிசோதிக்கப்படவுள்ளது என்ற அறிவுணர்வு மாயைக்கு இடமளிக்காது.

இதற்கு மேலாக தனக்குப் புரிய வேண்டியதாக இல்லை. தனது அறிவுணர்வு நிறைவானது என்ற ஆணவமும் மாயைக்கு இடமளிப்பதே. விளங்கிக் கொள்வதில் எந்தவித தவறும் இராது என்ற இறுமாப்பு உள்ளவரை, இருக்கக்கூடிய தவறை அறிய முடியுமா? அறிந்துகொள்வதன் மூலம்தான் அறியாமல் இருந்தது எது/எவை என மனம் உணரலாம்.

அறிவு தேங்கி நிற்பதற்காக அல்லாது விருத்திக்கானது. அறிவைப் பெருக்கு என்பது அதிகரிப்பதாக மட்டுமல்ல (குப்பை அகற்றி) சுத்தமாக்கு எனவும் தீட்டு என்பது கூர்மையாக்கு எனவுமாகும்.

தேடுதல் வேண்டாத அறிவு பழைய சரக்கு மட்டும் கொண்ட களஞ்சியம் (*Stores*) ஆனதே. பழையன கழிதலும், புதியன புகுதலும் ஆகாவிடின் அது நடைமுடை பாவனைக்கு உதவுமா? மூடவேண்டிய ‘கடை’ தான். பிரகாசமடையாத அறிவைக் கொண்டிருப்பதும் அவ்வாறானதே. எல்லாம் அவன் செயல். அவனது அருளால் பெறலாம் என்று மட்டும் கருதுவது ‘மந்திரத்தால் மாங்காய் பழுக்க வைக்கும்’ எண்ணம்தான்.

தவறாகப் புரிந்து கொள்வதாகவே (*Misunderstand*) மற்றவர்களுடன் பிரச்சனை எழக்காரணமாகிறது. இது தவிர்க்கப்படாவிடின் அன்பு காட்ட முடியுமா? புரிந்து/விளங்கி கொள்வதாவது எமது எண்ணத் தோற்றமே.

உணவை விழுங்கிக் கொள்வது இடர்பட்டால் மூச்சுத் திணறுவோம். மூச்சு நின்றும் போய்விடலாம். மற்றவரை விளங்கிக் கொள்வது இடர்படின் பேச்சில் திணறலாம். பேச்சை நிறுத்தவும் செய்வோம். மற்றவரை விளங்குவதில் தடங்கல் அவர்கள் மீது அன்பு காட்டுவதற்கு இடைஞ்சல் ஆவதே. இதைவிடுத்து ஆன்மா அமைதியானது, புனிதமானது என பேசி முழங்குவது தீர்வு ஆகுமா?

தன்னை முதலில் நேசித்தால் மற்றவர்களை நேசிப்பது சுலபம் என்கிறார்கள். தனது ஆன்மாவைக் குறித்து அவ்வாறு சொல்லப்படுவதாகலாம். அது அறிவுணர்வில் தேங்கிவிட்ட நம்பிக்கையே. மனம் என்பதன் யதார்த்தம் என்னவென்று இதுவரை தெளிவில்லை. அது மூளைக்கானது, ஆன்மாவிற்கானது என்ற வாதம் பயனற்றது.

எண்ணம் உருவாக்கல், மீட்கப்படுதலை (நினைவு) ‘மனம்’ ஆற்றுவதாகக் கருதப்படுகிறது. உணர்ச்சிவசப்படுவதும் எண்ணங்களால்தான். இழப்பு, ஏமாற்றம் என்ற எண்ணம் கவலை தரும். நன்மை, வசதி என்ற எண்ணம் மகிழ்ச்சி தரும்.

இழப்பு, ஏமாற்றமடையும் நோக்கம் எவருக்குமில்லை. அவை தவிர்க்கப்பட வேண்டிய சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறுவதால் அவை விளைகின்றன. அல்லது எம்மால் இயலுமானது (*Capable*) இவ்வளவுக்கே என்ற புரியாமை காரணமாகலாம். தன்னையறிதல் (*Self Realisation*) இதில் பயன்படுவது. நோக்கம் மேலதிகமாயினும் அது ஏக்கமாகிவிடக்கூடாது. விளைவு எவ்வாறாயினும் தன்னை நேசிப்பதே மன அமைதிக்கானது.

ஒருவரையொருவர் புரிந்துகொள்வதாகவே நட்பு வளர்வது, ஆன்மாக்களினது பொருத்தம் என்பதால் ஆத்ம நண்பர்கள் ஆவார்கள் என்பது கருத்தளவில் ஒருவருக்கொருவர் தமது நோக்கங்களில் விட்டுக்கொடுக்கும் (*Compromise*) மனப்பான்மையின்றி எந்த நட்பும் நிலைக்காது. பணிவு, கனிவு (இரக்கம்), பொறுமையின்றி இது சாத்தியமாகாது. இத்தனையும் கொண்டுள்ள ‘*Presence of Mind*’ என ஆங்கிலத்தில் விபரிப்பதை ‘மனச் சன்னிதானம்’ என்பதும், மனம் ஒரு கோவிலாகலாம் என்ற வகையில்தான்.

ஒருவரையொருவர் ஒருகணம் தப்பாகப் புரிந்துவிட்டதால் பலகால நட்பு அறுந்துவிடுவதற்கு சிலர் இடமளிக்கின்றனர். புரிந்துகொள்வதில் தவறு அத்தனை கொடிய ‘விஷம்’ ஆவதேன்? தன்மானம் குலைந்துவிடுவதாக ஆணவம் ஆதிக்கம் செலுத்துவதால்தான். ‘ஒருமையுடன் நினது திருமலரடி’ என்ற திருவருட்பாவில் ‘பேய் பிடியாதிருக்க வேண்டும்’ என்ற வரி குறிப்பிடுவது, ஆணவப் பேய் பற்றியதே.

தனது அறிவுக்கெட்டியது மாயையாயுமிருக்கலாம் என உணராமல் ‘அதுவே சரி’ எனும் பிடிவாத குணம். பிறவியில் அமையும் ‘கர்மம்’ என்றே கூறலாம். மும்மலங்களாகக் கருதப்படும் ஆணவம், கன்மம், மாயை என்பவை மனதில் (சித்தம்) நீங்கி சிவமாக வேண்டுவதாக தேவாரம் கூறுகிறது. இவை நீங்கினால் அன்புக்குத் தடையேது? ‘அன்பே சிவம்’ என்பதை மறுக்க முடியுமா?

பேச்சு எழாமலே இன்னொருவரின் நடை, உடை, பாவனையினால் அவரைப் புரிந்துகொள்வது தவறலாம். தனது புற அடையாளம் (*Identity*) போல் அவரது இல்லையென்ற எண்ணம், அல்லது அவரது இன, மத, கலாச்சாரம் பற்றிய பாரபட்சமான எண்ணம் (*Prejudice*) இதன் காரணமாகிறது.

சமயம் (*Religion*) என்பதை வாழ்க்கை முறைகளுக்கானது என அர்த்தம் கொள்ள வேண்டும் என்கிறார்கள். சமயத்தில் சொல்லப்பட்டிருப்பது எதுவும் கேள்விக்குரியதல்ல என்ற வாதமும் உண்டு. ஆன்மிக மார்க்கம் தேடுதலை குறிப்பதாக கீதை சொல்வதானால் கேள்வி அவசியம் தான். வேள்வி அல்ல. யாகம் என்பதைவிட தியாகம் அன்பு அமைதிக்கானதே.

யாவும்கண்டு (கேட்டு) அறிந்துவிட்டதாகக் கெட்டித்தனம் பேசுவது மட்டித்தனம். கண்டும் அறியத் தவறுவதை ‘கண்டறியாதன கண்டேன்’ என இறைவன் திருப்பாதம் கண்டதாக தேவாரம் பாடப்பட்டுள்ளது. புரிந்து கொள்வதில்லான தவறுகளைத் தவிர்த்துவிடுமோமானால் வாழ்வில் காணவுள்ளதெல்லாம் அன்புதான். அது இறைவனது திருப்பாதம் என்று மட்டுமா? அன்பு மூலம் அடையும் சாந்தி ஆயுளில் கிடைப்பது. அன்பே சாந்தி; அதுவே அமைதிக்கானது.

‘மும்மலங்களுக்கு அடிமையாயுள்ள வரை, அன்புக்கு அடிமையாக முடியாது.’ ●


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE
**200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508**

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

NOVEMBER- 2019 **நடைபெறும் நிகழ்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| 01 | Friday | Kanthasasdi Viratham-5 | கந்தசஷ்டி விரதம் - 5 |
| | | Ippasi Velli - 3 | ஐப்பசி வெள்ளி - 3 |
| 02 | Saturday | Ladcharchanai Ends | பி.ப. 1.00 மணி:இலட்சார்ச்சனை முடிவு |
| | | Kanthasasdi Viratham - 6 | கந்தசஷ்டி விரதம் - 6 |
| 03 | Sunday | Sri Murugan Abishegam | காலை 7.00 மணி : முருகன் அபிசேகம் |
| | | Thirukalyana Utsaam Starts | காலை 7.00 மணி : திருக்கல்யாண உற்சவம் தொடக்கம் |
| 07 | Thursday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 08 | Friday | Ippasi Velli - 4 | ஐப்பசி வெள்ளி - 4 |
| 09 | Saturday | Sani Prathosam | சனிப்பிரதோசம் |
| 11 | Monday | Full Moon | பூரணை |
| 12 | Tuesday | Kaarthikai Viratham | கார்த்திகை விரதம் |
| 15 | Friday | Sankadahara Sathurthi | சங்கடஹர சதுர்த்தி |
| 17 | Sunday | Apara Padcha Sasti | அபரபட்ச சஷ்டி |
| 18 | Monday | Kaarthikai Somavaram-1 | கார்த்திகை சோமவாரம் - 1 |
| 19 | Tuesday | Apara Padcha Astami | அபரபட்ச அட்டமி |
| 22 | Friday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 24 | Sunday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 25 | Monday | Karthikai Somavaram - 2 | கார்த்திகை சோமவாரம் - 2 |
| 26 | Tuesday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| 30 | Saturday | Sathurthi Viratham | சதுர்த்தி விரதம் |



## அறிவாளிகள்

இலண்டனில் பொறியியலாளராகப் பணிபுரியும் விமலின் தாயார் பரமேஸ்வரிக்கு வயது ஐம்பது. இலங்கை பல்கலைக்கழகத்தில் கடந்த இருபது வருடங்களாகப் பேராசிரியையாக கடமையாற்றுகிறாள். பேராசிரியையின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அந்தப் பல்கலைக்கழகமே தலைவணங்கும்.

பரமேஸ்வரி எப்பொழுதுமே - எதிலுமே யாருடைய அபிப்பிராயத்தையும் கேட்பதில்லை - எதிர்பார்ப்பதுமில்லை - அவள் கணவன் - பிள்ளைகள் உட்பட தன்னுடைய பார்வையில் - கணிப்பில் - முடிவுகளில் அசைக்க முடியாத நம்பிக்கை அவளுக்கு. பேராசிரியை அல்லவா!

தனது ஒரு மாத விடுமுறையைக் கழிப்பதற்காக இப்பொழுது முதல்முறையாக இலண்டன் வந்திருக்கிறாள் பரமேஸ்வரி. வந்து இரண்டே நாள்கள் தான் ஆனாலும் - இலண்டனைப் பற்றிய தனது கருத்துக்களை - தனது முடிவுகளை - பத்து வருடங்களாக இலண்டனிலேயே வாழும் தன் மகன் விமலிடம் அள்ளி இறைத்த வண்ணமிருக்கிறாள். அன்று காலை கூட உணவருந்தும் போது பரமேஸ்வரி கூறுகிறாள் :

எங்களுடைய நாட்டில் - எமது இனத்திற்குள் ஒற்றுமையே கிடையாது. ஒரு பரந்த மனப்பான்மை கிடையாது. அவற்றைப் பார்ப்பதென்றால் இந்த நாட்டிற்குத்தான் வரவேண்டும். நானும் தான் பார்க்கிறேன் - இந்த வெள்ளைக்காரப் பெட்டைகள் எவ்வளவு ஒற்றுமையாக - அன்பாக - கறுப்பு இன ஆப்ரிக்கர்களுடன் பழகுகிறார்கள். எங்களுடைய நாட்டில் இப்படி ஒன்றை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது.

விமல் இதற்கு எதுவுமே கூறவில்லை.

இவர்கள் ஏன் - எதற்காக - எதை எதிர்பார்த்து - அவர்களுடன் பழகுகிறார்கள் என்று விமலுக்குத் தெரியும். அதையெல்லாம் எப்படி வெட்கத்தைவிட்டுத் தாயாரிடம் கூறுவது? ஒன்றுமட்டும் விமலுக்கு நிச்சயமாகத் தெரியும்.

இலங்கை திரும்பியதும் - இலண்டனில் இன ஒற்றுமை - என்ற தலைப்பில் அம்மா பல்கலைக்கழகத்தில் ஒரு உரை நிகழ்த்துவாள். அம்மாவின் அறிவையும் ஆற்றலையும் கண்டு அந்த பல்கலைக்கழகமே பிரமித்துப் போகும்!

பேராசிரியை அல்லவா!



## எல்லாமே புரிந்தது!

மிருகக் காட்சி சாலையில் பிறந்த - ஒரு வயதே நிரம்பிய அந்தக் குரங்குக் குட்டி ஒரு நாள் தன் தாயிடம் கேட்டது :

அம்மா! எனக்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம். அது மனிதர்களைப் பற்றியது. இங்கு வரும் இளம் காதல் ஜோடிகள் ஒருவரையொருவர் உரசிக் கொண்டு மிகவும் நெருக்கமாக நடந்து செல்கிறார்கள். முகத்தில் அசடு வழிய ஒருவரையொருவர் பார்க்கிறார்கள். அடிக்கடி முத்தமிட்டுக் கொள்கிறார்கள். தெய்வீகக் காதல் - பூர்வ ஜென்ம பந்தம் - பாக்கியம் - அழகிய சீதேவி - என்னும் வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கிறார்கள்.

ரொம்பவும் பெருந்தன்மையுடன் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடந்து கொள்கிறார்கள். காதலி இங்கு விற்கும் எதைக் கேட்டாலும் காதலன் உடனே அதை வாங்கிக் கொடுத்துவிடுகிறான்.

ஆனால் திருமணமாகிய - சிறிது வயதான ஜோடிகளோ விலகி விலகி நடக்கிறார்கள். ஒருவரையொருவர் அடிக்கடி வெறுப்பாக முறைத்துப் பார்க்கிறார்கள் - சண்டை வேறு போட்டுக் கொள்கிறார்கள். அப்பொழுது பூர்வ ஜென்ம பாவம் - அசிங்கமான மூதேவி - முட்டாள்தனமான காதல் - போன்ற வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கிறார்கள்.

மனைவி இங்கிருக்கும் எதைக் கேட்டாலும் கணவன் வாங்கிக் கொடுப்பதே இல்லை. மாறாக - அப்பன் வீட்டிலிருந்து காசு கொண்டு வந்தாயா? - என்று கூச்சலிடுகிறார்கள். இது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை அம்மா.

தாய் குரங்கு நீண்ட நேரம் யோசித்தது. இனம் வேறு - வயது வேறு - அனுபவம் வேறு. இதை எப்படி தன் குட்டிக்கு விளக்குவது என்றே அதற்குப் புரியவில்லை. நீ ஒரு சிறு குரங்கு. காலம் வரும்போது உனக்குக் கண்டிப்பாகப் புரியும் என்று மட்டும் கூறிவிட்டு விலகிக் கொண்டது தாய் குரங்கு. எதுவுமே புரியாமல் தலையை சொறிகிறது குட்டி குரங்கு.

ஒருநாள் - தனது கூட்டிற்கு முன்னால் நின்று தன்னையே நோக்கும் அந்த யுவதியின் கையில் இருக்கும் அந்த அழகான தோல் பையினுள் என்ன என்ன எல்லாம் இருக்கும் என்று குட்டி குரங்கு சிந்திக்கிறது. அதன் மனதினுள் அந்த பையைப் பற்றி ஆயிரம் கற்பனைகள். அதுமட்டும் எனக்குக் கிடைத்துவிட்டால் - எவ்வளவு கவனமாகப் பாதுகாப்பேன் அதை - எவ்வளவு பெரிய பாக்கியசாலி நான்!

திடீரென அந்தப் பெண்ணுடன் கூட வந்திருந்த சிறுமி தனக்கு அந்தப் பை வேண்டுமென்று அடம் பிடிக்கிறாள். கையிலிருந்த பிஸ்கட்டை வீசி எறிந்துவிட்டு நிலத்தில் விழுந்து புரளுகிறாள். வேறு வழியில்லாது பை கை மாறியது.

பையை நெஞ்சுடன் அணைக்கிறாள் சிறுமி. முத்தமிடுகிறாள். சிறிது நேரம் பையுடன் விளையாடிய பின் அதை ஆவலுடன் திறக்கிறாள் சிறுமி. குட்டி குரங்கு அதைவிட ஆவலாக எட்டிப் பார்க்கிறது. பையினுள் ஒரு கைக்குட்டை - ஒரு சீப்பு - சில அலங்கார சாதனங்கள். பையை வீசி எறிகிறாள் சிறுமி.

அம்மா! எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது என்று ஆர்ப்பரிக்கிறது குட்டி.

## பக்தர்



அவர் ஒரு மிக பிரபல சாமியார்.

அந்தப் பிரபல சாமியாரின் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுள் ஒரு பரம பக்தர் டாக்டர் குணசீலன்.

எதற்காக அவருக்கு இந்த பரம பக்தர் பட்டம்?

காரணங்கள் ஏராளம்.

அவருடைய வீட்டின் ஹாலில் அந்தச் சாமியாரின் மிகப்பெரிய உருவப் படம் ஒன்று தொங்குகிறது.

அதற்கு விலை உயர்ந்த சந்தன மாலை ஒன்று நிரந்தரமாக அணிவிக்கப்பட்டிருக்கிறது.

வாரத்திற்கு இரண்டு தடவைகள் அவருடைய வீட்டில் பஜன் நடைபெறுகிறது.

எத்தனையோ பெரிய பக்தர்கள் இந்த பஜனில் கலந்து கொள்கிறார்கள்.

வருடத்திற்கு ஒரு தடவை அவர் இந்தியாவிற்குச் சென்று அந்தச் சாமியாரை தரிசனம் செய்கிறார்.

தனது நண்பர்களைச் சந்திக்கும் போது அந்தச் சாமியாரின் பெயரை பக்தியுடன் உச்சரித்து அவர்களை வாழ்த்துகிறார்.

இது தவிர - வாழ்க்கையின் நிலையாமை குறித்து - அடுத்தவர்களுக்கு உதவி செய்வது குறித்து - பணத்தின் நிலையற்ற தன்மை குறித்து - அவர் அடிக்கடி பேசுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக - இந்தியாவிலிருந்து இலண்டனுக்கு விஜயம் செய்யும் சாமியார்கள் அவரின் வீட்டிலேயே தங்குவதற்கு ஒழுங்குகள் வேறு செய்து கொடுக்கிறார்.

அதனால் தானோ என்னவோ - டாக்டர் குணசீலன் ஒரு அருமையான மனிதர் என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்.

கடந்த மாதம் கூட - இலண்டனுக்கு விஜயம் செய்த ஒரு மிகப்பெரிய சாமியார் வழமைபோல டாக்டரின் வீட்டிலேயே தங்கியிருந்தார். திரி காலமும் உணர்ந்த - பக்தர்களின் குறைகளைத் தவறாது தீர்த்து வைக்கும் அந்தச் சாமியாரை பக்தர்கள் தனிமையில் மட்டுமே தரிசனம் செய்ய முடியும்! பக்தர்கள் அவருடன் அந்தரங்கமாக பேசும் விடயங்கள் வேறு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. டாக்டர் குணசீலன் வீட்டில் சாமியாரைச் சந்திப்பதற்காகப் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது. யாருக்குத்தான் பிரச்சகைள் இல்லை.

பக்தர்கள் எல்லோரும் வீடு சென்ற பின் - பயபக்தியுடன் சாமியாரின் அறைக்குச் சென்ற பரம பக்தர் - சேவையின் நாயகன் - பஜனை வேந்தன் - அருமையான மனிதர் - டாக்டர் குணசீலன் கேட்டார் :

சுவாமி! எனது நண்பன் ஒருவன் சில வருடங்களுக்கு முன் கடனாக வாங்கிய பணத்தை இன்னும் திருப்பி தரவில்லை. அவன்மீது வழக்குத் தொடர்வதா? அல்லது

காடையர்களை வைத்து மிரட்டுவதா என்று ஒன்றுமே தெரியவில்லை. தயவு செய்து அந்தப் பணம் எனக்குத் திரும்பவும் கிடைக்க ஏதாவது அறிவுரை கூறவும்.


இங்கு எத்தனை சாமியார்கள்!
எத்தனை பக்தர்கள்!
எத்தனை டாக்டர்கள்!

அரோஹரா!

ஜி.ஏ. பிரபா

# ஷீர்டி பாபா

## இருள் நிறைந்த காட்டில் தவிப்பவனுக்கு ஒளி நிறைந்த நிலவு குரு



**பத்துத் திசையெங்கும் நின்புகழ்**
**துந்துபி ஓசையாய் நிறைந்ததே.**
**கருணாமூர்த்தியைக் கண்ணாரக் காணவே**
**மக்கள் ஷீர்டி வருகின்றனரே!**
**பேரருள்மிகு திருவாக்கமுதம் யாம்தினமும்**
**பருகி மெய்ம்மறந்தோமே!**

**– ஷீர்டி காலை ஆரத்தி**

இந்தப் பிரபஞ்சம் புரிந்துகொள்ள முடியாத ஓர் அழகான மாயை. அதில், இந்த பூமி ஒரு புண்ணிய தலம். அதனால்தான் இதில் வந்து பிறக்க தேவர்களும், அவதாரம் எடுக்க தெய்வங்களும் விரும்புகின்றனர். ஆனால், இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் பிறக்கும் ஒவ்வொரு ஜீவனும் மாயை என்ற சக்தியின் பகடைக்காய்.

நமக்குள்ளேயே இருக்கும் மாயையின் சக்தியால் நாம் ஆட்டுவிக்கப்படுகிறோம். அந்த மாயை நம்மை ஆட்டுவித்துக் கொண்டே இருக்கிறது. அதில் கட்டுண்டு நாம் நித்திய போராட்டத்தில் இருக்கிறோம். மாயையின் கிரியைகளால் உருவாகும் நன்மை, தீமை என்று நடக்கும் யாவற்றையும் இறைவன் கவனித்துக் கொண்டிருக்கிறார்.'

சாதாரண ஜீவராசிகள் ஜனன, மரணப் போராட்டத்திலிருந்து விடுதலை அடைய, மாயை நீங்க, தமக்கு ஏற்ற எளிய வாழ்க்கை நியதி மற்றும் ஆன்மிக வழித்தடங்களைப் பெற, இறைவன் மகான்களை அனுப்புகிறார். அவர்களே நமக்குக் குருவாக அமைந்து நம்மை வழிநடத்துகிறார்கள்.

சத்குரு, நமக்குள் நிறைந்து, அல்லும் பகலும் நம் நலன்களைக் கண்காணித்துக் கொண்டிருப்பவர். தர்மம் குலைந்து, இருள் நிறைந்த காட்டில் தவிப்பவனுக்கு ஒளி நிறைந்த நிலவு குரு. 'குரு' என்றாலே 'இருளை அழித்து ஒளியைத் தருபவர்' என்றுதான் பொருள். நம் அறியாமை என்னும் இருளை அகற்றி, ஞானம் என்னும் ஒளியை ஏற்றுபவர் குரு. அவரின் நாமமே மனிதர்களுக்கு மாமருந்து.

அப்படி மாமருந்தாய் மகத்துவமாய் இன்று உலகம் முழுதும் உச்சரிக்கப்படும் நாமம் பாபா.

'சாயிராம்' என்று சொல்லும் போதே ஒரு சிலிர்ப்பு, நம்பிக்கை, துணிவு மனத்துள் ஏற்படுகின்றன. குருசிஷ்யன் உறவு, குருவின் கருணை, வழிகாட்டல் எப்படி இருக்க வேண்டும், சிஷ்யன் குருவிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை எல்லாம் பாபாவின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. அவர் வாழ்வே நமக்கு போதனை. அவர் எல்லா உயிர்களிடத்தும் கருணை, அன்பு, எளிமை கொண்டு ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்த எல்லையற்ற பேரின்ப வடிவம். அவர் வாழ்க்கையின் எல்லாச் செயல்களும் மனித வாழ்வின் உயர்வுக்கே நடைபெற்றன. உலகம் முழுதும் ஒன்றாக்கும் சக்தி வடிவம் அவர்.

ஆழம் காண முடியாத, அளவிட முடியாத சமுத்திரம் அவர். ஆத்ம அனுபவம், இறை அனுபவம் முழுதும் நிரம்பப் பெற்றவர். அவரின் வரலாற்றை மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டுக் கடந்து செல்ல முடியாது. அவரது வாழ்க்கை ஒரு பாற்கடல்.

ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் "நடந்தது, நடப்பது, நடக்கப் போவது அனைத்தும் நான் அறிவேன். ஆனால் என்னை அறிந்தவர் எவரும் இல்லை" என்கிறார். அதையே பாபாவும் கூறுகிறார்.

"கர்ம வாசனையாலேயே நீ என்னிடம் நெருங்குகிறாய். பல ஜென்மங்களாக நான் உன்னை அறிவேன். என்னை நம்பி நீ என்னிடம் நெருங்கினால் நான் உன் கர்மபலன்களைப் போக்கி அழியாத முக்தி இன்பத்தை அளிப்பேன்" என்கிறார் பாபா. 'அனைத்துள்ளும் நிறைந்திருக்கும் பிரும்மம் நானே' என்று அத்வைத சாரமாக வாழ்ந்தவர் பாபா.

'உன்னில் இருக்கும் பிரம்மமே எனக்குள்ளும் உள்ளது' என்ற அவரின் சொல்படி நடந்தால் நம்மால் யாரையும் வெறுக்க முடியாது. எங்கும் அன்பு நிலவி, அகந்தை, கர்வம், வெறுப்பு, பொறாமை, துவேஷம் விலகி, அன்பு, கருணை, குருபக்தி, ஞானம் போன்ற உயரிய குணங்கள் வளர்ந்து உலகே அன்புமயமாக இருக்கும்.

"நான் ஷீர்டியில் மட்டும் இல்லை. பிரபஞ்சம் முழுதும் பரவி வியாபித்து இருக்கிறேன். ஷீர்டியில் மட்டுமே பாபா இருக்கிறார் என்று நினைப்பவன் என்னை முழுதாக அறியவில்லை" என்கிறார்.

"உங்களை ஆட்டுவிப்பவன் நான். எல்லாவற்றையும் படைத்து, காத்து, உலகின் ஆதாரமாண் விளங்குபவன் நானே. யார் என்னை மனதார நினைத்து நம்புகிறார்களோ அவர்களுக்கு ஒருபோதும் துன்பம் நேராது" என்பது பாபாவின் உறுதிமொழி.

தன் பக்தர்களுக்குப் பாபா, 'நம்பிக்கையோடும், பொறுமையோடும் மனத்தில் இறைவனைப் பிரதிஷ்டை செய்து உன் எண்ணங்கள், செயல்களை அவருக்கு அர்ப்பணம் செய்' என்கிறார்.

மகாபாரதத்தில் இந்த உறுதியான நம்பிக்கை அர்ஜுனனிடம் இருந்தது. கண்ணனுக்கு அர்ஜுனன் மிக நெருக்கமானவன். அதற்குக் காரணம் அர்ஜுனன் அவர்மேல் வைத்திருந்த அளவில்லாத நம்பிக்கை. குருக்ஷேத்திரப் போரின்போது 'நாளை அர்ஜுனனைக் கொல்வேன்' என்று சபதம் செய்கிறார் பீஷ்மர். பாண்டவர் பக்கம் எல்லோரும் அஞ்சி நடுங்குகிறார்கள். அன்று இரவு கிருஷ்ணனுக்கே தூக்கம் வரவில்லை. மறுநாள் எழுந்து வரும் கிருஷ்ணனுக்கு ஆச்சர்யம். அர்ஜுனன் குளித்து, புத்துணர்ச்சியுடன் அவர் எதிரில் வந்து நிற்கிறான்.

வியப்புடன் கேட்கிறான் கிருஷ்ணன். "அர்ஜுனா, உனக்குக் கவலை இல்லையா?"

அதற்கு அர்ஜுனன் "நான் என்னை உன்னிடம் ஒப்புவித்துவிட்டேன். என் கவலையெல்லாம் உன்னுடையது. எனவே நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்கிறான். அதன்பிறகு நடந்த அற்புதங்கள் நமக்குத் தெரியும்.

இந்த அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் பாபா நமக்கு உபதேசிப்பது. தன்னலமற்ற பக்தி, நம்பிக்கை, அவரின் கருணைக்குக் காத்திருக்கும் பொறுமை இருந்தால் போதும். பாபாவின் கருணை எல்லோருக்கும் சமமாகப் பொழியும் வான்மழை போன்றது. விழும் மண்ணுக்குத் தக்கவாறு அதன் சுவை, நிறம் மாறுகிறது.

"உங்களை ஆட்டுவிப்பவன் நான். எல்லாவற்றையும் படைத்து, காத்து உலகின் ஆதாரமாய் விளங்குபவன் நானே."

நமக்கு அவர் யார் என்ற கேள்வியைவிட அவர் நமக்கு என்ன சொல்கிறார், அவர் வாழ்க்கை நமக்குக் கூறுவது என்ன என்பதே முக்கியம். அவருடைய நாமங்கள் மூச்சுக்காற்று போல், நீருக்குள் மூழ்கும் ஜீவனுக்கு பிராணவாயு போல், அந்த நாமத்தின் பலன், அதன் அர்த்தம் நமக்குச் சொல்லும் கதைகள், அவரின் நாமத்தையே சுவாசித்த பக்தர்கள் பற்றிய விவரங்கள் முக்கியம்.

'பாபா என்பது உடல் அல்ல' என்று அவரே கூறுகிறார். அவரை ஸ்தூல உடலாகப் பார்ப்பதைவிட நாமத்தின் மூலம் 'தரிசிப்பதே' சிறந்தது.

எல்லா வேத சாஸ்திரங்களுக்கும் மூலம் ஏதோ ஒரு நாமம்தான். அவரின் நாமத்தை உச்சரிக்கும் போது வேறு சிந்தனைகள் தோன்றாது.

இராமாயணத்தில் சேது பாலம் கட்டும்போது வானரங்கள் போடும் கற்கள் கடலில் மிதப்பதைப் பார்த்து ராமருக்கும் ஆசை. ஹனுமானிடம் கேட்டு தானும் ஒரு கல்லை எடுத்துப் பாலம் கட்டுவதற்குக் கடலில் போடுகிறார். ஆனால் கல் மூழ்கிவிடுகிறது. அப்போது அனுமன் அந்தக் கல்லில் 'ராமா' என்று எழுதிப் போடுகிறார். கல் மிதக்கிறது.

அப்போது அனுமன் "பிரபோ, உங்களைவிட உங்கள் நாமத்துக்கே மகிமை அதிகம்" என்கிறார்.

கலியுகத்தில் நாமம் கூறுவதே இறைவனை அடைய எளிய வழி என்கின்றன வேதங்களும்.

"எறும்பினால் ஒரு மலையைச் சுமக்கவும் முடியாது. மேலே தூக்கவும் முடியாது. ஆனால் அதன்மேல் ஏற முடியும். அதற்குக் காரணம் அதனிடம் உள்ள நம்பிக்கை. அந்த நம்பிக்கையை என் நாம உச்சாடனையில் வைத்தால் அப்படிப்பட்ட மலையுச்சியில் உன்னை நான் உட்கார வைப்பேன்" என்கிறார் பாபா.

"எல்லா வேத சாஸ்திரங்களுக்கும் மூலம் ஏதோ ஒரு நாமம் தான். அவரின் நாமத்தை உச்சரிக்கும் போது வேறு சிந்தனைகள் தோன்றாது. என் நாம ஸ்மரனையினால் மாயை அகல்கிறது. என் வாழ்க்கைத் தத்துவம் உனக்குப் புரியும்" என்கிறார் சாயிராம்.

**பிரபல தமிழ் பட இயக்குநர் சிவா தன் அனுபவத்தை மனம் திறந்து சொல்கிறார்:**

முதன்முதலில் நாகார்ஜுனா நடித்த தெலுங்குப் படத்தில் கேமராமேனாக வேலை பார்த்தேன். அப்போது ஹைதராபாத்தில் உள்ள வெள்ளைக்கற்களால் கட்டப்பட்டிருந்த சாயிபாபா கோயிலுக்குப் போனேன். எனக்கு வழிகாட்ட ஒரு குரு கிடைத்துவிட்டார் என்கிற 'வைப்ரேஷன்' எனக்குள் உண்டானது. அதன்பிறகு ஒவ்வொரு வியாழக்கிழமையும் தவறாமல் கோயிலுக்குப் போய்விடுவேன். 'பாபா, நான் சீக்கிரம் டைரக்டர் ஆகணும்' என்று பலமுறை மனமுருக வேண்டியிருக்கிறேன்.

இனிமேல் இயக்கம்தான் என் தொழில். அதுவரை கேமராவைத் தொடமாட்டேன் என்று சபதம் போட்டு ஒன்றரை வருஷம் கடுமையாகக் கஷ்டப்பட்டேன். மனச்சோர்வு, உடல்சோர்வால் அவதிப்பட்டேன். அப்போதெல்லாம் இரவு முழுவதும் அந்த பாபா கோயிலின் வாசலில் படுத்துக்கிடந்து விடிய விடிய பாபாவைத் துதித்தேன். இதோ இயக்குநராகிவிட்டேன். இப்போதும் என்னை பாபாதான் வழிநடத்துகிறார். அஜித்சாருடன் 'வீரம்' படத்தில் ஒப்பந்தம் ஆகும் வரை ஆன்மிகம் பற்றிப் பேசிய பிறகுதான் தெரிந்துகொண்டேன். என் வாழ்க்கையில் சந்தோஷம் வந்தாலும் சரி, கஷ்டம் வந்தாலும் சரி, பாபாவின் காலைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொள்வேன். அவரும் ஒருமுறைகூட என்னைக் கைவிட்டதே இல்லை.

எனக்குத் துன்பம் வரும்போதும், மனக்கலக்கம் ஏற்படும் போதும் பாபாவையே துதிப்பேன். 'என்னைக்குமே நான் உன்கூடவே இருக்கேன், கவலைப்படாதே' என ஆறுதல் சொன்னார்; சொல்லிக் கொண்டிருக்கிறார். என் திருமணத்துக்கு முன்பிருந்தே என் மனைவி ராஜலட்சுமி தீவிரமான சாயிபாபா பக்தை. இப்போது என் வீட்டில் பூஜை அறையில் மட்டுமல்ல, வீடு முழுவதுமே சாயிபாபாவின் போட்டோவையே மாட்டி வைத்திருக்கிறார் அவர். சாயி எனக்குப் பலமுறை வழிகாட்டியிருக்கிறார். ஒருவழியும் தெரியாமல் கவலையுடன் தூங்கினால், என் கனவில் வந்து என் கேள்விக்கு விடை சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். என் மகன் பிறந்த பிறகு ஒரு ஹோட்டலில் குடும்பத்தினருக்கு மட்டும் சின்னதாக ஒரு பார்ட்டி வைத்தேன். கையில் என் குழந்தை. அப்போது மலேசியாவிலிருந்து வந்திருந்த ஒரு தம்பதி தங்கள் பையிலிருந்து பாபாவின் விபூதி பிரசாதத்தை எடுத்து என் மகன் நெற்றியில் பூசி ஆசிர்வாதம் செய்தனர். அந்தச் சமயம் எனக்கும் என் மனைவிக்கும் அப்படியே மெய்சிலிர்த்தது. ஒரு குடும்ப உறுப்பினர்போல உறுதுணையாக இருந்து வருகிறார் பாபா. ●

# எம் வழி தவறின்...



வவுனியூர் இரா.உதயணன்

மனம் ரணமாகி இதயத் துடிப்புக்கள் வேகமாக மூச்சை விரைவாக விட்டுவிட்டு அமர்ந்திருந்தார் கோபாலன்.

எங்கட நாட்டை விட்டுட்டு இங்க வந்திருக்கவே கூடாது. வந்திட்டம் இனி கஸ்டப்பட்டு பிள்ளையள் இரண்டையும் படிக்க வைச்சு நல்ல வாழ்க்கை வாழலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்க அதையெல்லாம் தவிடுபொடியாக்கி மூத்தவள் செய்த வேலை. அதை ஜீரணிக்க முதல் அடுத்தது.

அக்கரைக்கு இக்கரை பச்சை என்று சொன்னதெல்லாம் உண்மைதான்.

கோபாலனின் நெஞ்சு விம்மித் தணிந்தது.

தேநீர்க் கோப்பையுடன் அவரது அறைக்குள் நுழைந்த ஆனந்தி கோபாலனின் முகத்தையும் விம்மித் தணியும் நெஞ்சையும் பார்த்தவுடன் அதிர்ந்து போனாள்.

"என்னப்பா தனிய இருந்து...." தேநீர்க்கோப்பையை மேசையின் மேல் வைத்துவிட்டு, கேட்டுக்கொண்டே கோபாலனின் அருகில் வந்தாள்.

ஆனந்தி கிட்ட வர கோபாலனுக்கு கோபம் பொத்திக்கொண்டு வந்தது.

ஒன்றும் சொல்லாமல் கண்களைத் துடைத்துக்கொண்டு விரக்தியும் வெறுப்பும் கலந்த பார்வையை ஆனந்தியின் மேல் செலுத்தினார்.

எழும்பி ஆனந்தியை அறைய வேணும் போல அவருக்கிருந்தது.

"சனியனே எல்லாம் உன்னாலதான்..." பெரிதாக கத்தினார். மூச்சு வாங்கியது.

"நான் வேலை செய்யாமல் வீட்டில இருக்கிறன் எண்டதால எதற்கெடுத்தாலும் என்மேலதான் எரிந்து விழுறியள். அப்படி நான் என்ன செய்து போட்டன், அதுகளாக தேடிக்கொண்டதுகள்."

"நீ என்ன செய்தனியோ. உனக்கு ஒண்டும் தெரியாதுதானே. என்ர வாயைக் கிளறாதை"

ஆனந்தி ஒன்றும் சொல்லாமல் கோபாலனைப் பார்த்தாள்.

"உன்ர பிள்ளையள் ரெண்டும் மெடிசின் தான் படிக்கவேணும் எண்டு என்னைப் போட்டுப் படுத்தியபாட்டை மறந்திட்டியோ. இரவு பகலாக நித்திரையும் ஒழுங்காக இல்லாமல் அரிவு வெட்டும் சூடடிப்பும் வயலில செய்வது போல ..., என்னை விட்டுவச்சியே. அரிவு வெட்டும் சூடடிப்பும் காலத்துக்குக் காலம்தான் வரும். ஆனால் என்ர நிலை. அறுபதைத் தாண்டேல்ல. எத்தனை வருத்தங்கள். கடைசியில பிள்ளைகளால கண்டதென்ன...."

"அப்பா....உங்களோட கதைக்க வெளிக்கிட்டால் உணர்ச்சிவசப்பட்டு ஏறிவிழுவியள். யுதார்த்தமாக யோசித்துப் பாருங்கோ. எங்கடை நாட்டைவிட்டு தப்பிப்பிழைத்து வந்து எங்கட பிள்ளையளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நாங்கள் செய்திட்டம். ஆனால் அதுகல்தான் எங்களைப் பற்றி யோசிக்குதுகள் இல்லை."

கோபாலனுக்கு ஆனந்தி எப்பவும் தன்னில பிழை இருக்கிறதை ஒத்துக்கொள்ள மாட்டாள் என்று நன்றாகவே தெரியும்.

"கடவுளே எப்பயடி நீ ஒத்துக்கொள்ளப் போறாய். உன்ர பிள்ள வளர்ப்பாலதான் உன்ர பிள்ளையள் இப்படிப் போச்சு என்று"

"உங்களோட கதைத்தால் இந்த வயசில விவாகரத்திலதான் போய் முடியும். அதைவிட மௌனம் சாதிப்பது மேல்" என்று சொல்லிவிட்டு ஒரு வெட்டுவெட்டிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

கோபாலனுக்கு மேலும் கோபம் வந்தது. ஆனால் கோபப்பட்டுத்தான் என்ன பயன்.

மூச்சு வாங்கியது.

மூச்சை விரைவு விரைவாக பலமுறை இழுத்துவிட்டுக்கொண்டார்.

மனம் அழுதது. அதன் தாக்கம் கண்களில் தெரிந்தது.

"கலாச்சாரம் பண்பாடு என்று ஊரில வாழ்ந்த நீங்கள் இங்கு வந்தது பெரிய பிழை. இங்கத்தைய வாழ்க்கை முறைக்கு உங்களை நீங்கள் பழக்கிக்கொள்ளேல்ல. பிறகு ஏன் என்னில பிழை பிடிக்கிறியள். என்ர ரெண்டும் இங்கத்தைய வாழ்க்கை முறைக்கு பழகிப்போட்டுதுகள். அதனால அதுகள் தங்கட இஸ்டத்துக்கு வாழுதுகள். நீங்கள்தான் சும்மா அதுகளைப்பற்றி யோசித்து கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறியள்."

ஏதோ தானும் எங்கட பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடுகளைத் துறந்து ஆங்கிலேயக் கலாச்சாரத்தில் ஊறிப்போனவள் போன்று ஆனந்தி கதைக்கு போது அவளது குரல்வளையை திருகவேணும் போல் கோபாலனுக்கு தோன்றும்.

ஒரு தாயாக அவள் பிள்ளைகளை பொத்தி பொத்தி வளர்த்தவள்தான். ஆனால் ஆனந்திவிட்ட பிழை அதிகம் எங்கட பிள்ளைகளோடு சேரவிடாமல் வெள்ளைக்காரப் பிள்ளைகளோடு சேர விட்டதுதான். அதுவும் சனி ஞாயிறு தினங்களில் நைட் ஸ்ரே என்று இவர்களது ரெண்டும் வெள்ளைக்கார வீட்டில்போய் படுப்பது, பிறகு வெள்ளைக்காரப் பிள்ளைகள் இவர்களது வீட்டில் வந்துபடுப்பது, வீட்டில் எந்த நேரமும் விருந்தினர் அறையில் ஆங்கிலத்தில்தான் படங்களும் கார்ட்டூன்களும் பார்ப்பது. தமிழ் கதைப்பதை தமிழ் பிள்ளைகளோடு சேர்வதை விடுத்து மற்ற இனத்தவரோடு சேர விட்டதன் விளைவுதான் இன்று கோபாலனின் சோர்வுக்குக் காரணம்.

ஆனந்தி பொறுமையாக வீட்டிலிருந்து கெட்டித்தனமாக இரு பிள்ளைகளையும் டாக்டராக்கிவிட்டாள். ஆனால் அவர்கள் இருவரும் டாக்டராக வேண்டும் என்பதற்கு அவள் பாவித்த அணுகுமுறையின் தாக்கம்தான் கோபாலனதும் ஆனந்தியினதும் இன்றைய இந்த நிலைக்கு காரணம்.

தமிழே தெரியாமல் கோயில்களுக்கு கூட்டிச் செல்லாமல் தமிழ்ப்பிள்ளைகளுடன் பழகவிடாமல் வளர்ந்த வளர்ப்பின் விளைவுகளை இனி இருவரும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

எத்தனையோ உறவுகள் ஆனந்திக்கு எமது கலாச்சாரம் பண்பாடுகள் எங்கட பிள்ளைகளுக்கு தெரிந்திருக்கவேணும் என்று சொல்லியும் செவிமடுக்காதவளாய் தன் இஸ்டப்படி தன்பிள்ளைகளை வளர்த்ததன் முடிவுதான் இன்றையநிலை.

ஆனந்திக்கு தான் பிள்ளைகளை வளர்த்த முறையில் பிழைவிட்டுவிட்டேன் என்று பிற்காலத்தில் உணர்ந்தும் அதை ஒத்துக்கொள்ள மனம் இடம்கொடுக்கவில்லை.

இரவு பகலாக நேரம் பாராது குடும்பத்தின் வளர்ச்சிக்காக உழைத்த கோபாலனிலும் பிழை இருக்கு என்று ஆனந்தி சண்டைபிடிக்கும் போது கோபாலனும் பதில் சொல்ல முடியாமல் அடங்கி ஒடுங்கிப்போன நாட்களும் உண்டு.

மூத்தவள் ஆகவர்த்தி லண்டனிலிருந்து நானூறு மைல்கள் தொலைவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டராக வேலை செய்கிறாள். அவளுக்கு ஒரு வெள்ளைக்கார போய் பிரண்ட் இருக்கு. அவனும் டாக்டர்தான். திருமணம் முடிக்காமல் இருவரும் ஒன்றாகத்தான் வாழ்கிறார்கள்.

முதன் முதலில் ஆகவர்த்தி வந்து கேபாலனுக்கும் ஆனந்திக்கும் சொன்னபோது இருவரும் கொதித்தெழுந்தனர். கோபப்பட்டனர். ஆகவர்த்திக்கு புத்திசொல்லி தமிழ் சம்பிரதாயங்கள் கலாச்சாரம் பண்பாடுகளை எடுத்துக்கூறினர்.

ஆகவர்த்தி ஒரு வசனம் மாத்திரமே சொன்னாள். "சின்ன வயசில இருந்து நீங்கள் அப்படி வளர்க்கவில்லையே அப்பா, அம்மா"

இருவரும் வாயடைத்துப்போய் அப்படியே இருந்த இடத்தில் இருந்தனர்.

இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இன்னமும் அவர்கள் லிவிங் ருகேதர்தான்.

இந்த அதிர்ச்சியில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வந்த கோபாலனுக்கும் ஆனந்திக்கும் இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

மகன் திவ்யன் சென்ற ஞாயிறு இரண்டு நாட்கள் லீவு எடுத்துவிட்டு வீட்டிற்கு வந்திருந்தான். கிட்டத்தட்ட எட்டுமாதங்களாக அவனுக்கு கோபாலனும் ஆனந்தியும் பெண் பார்க்கத் தொடங்கியிருந்தனர். எத்தனை அழகான படித்த பெண்களின் போட்டோக்களும் குறிப்புக்களும் கல்யாணத் தரகரிடமிருந்து வந்திருந்தன.

எந்தப் படங்களைக் காட்டி கலியாணம் பற்றி பேசிய போதெல்லாம் இப்ப எனக்கு கலியாணம் வேண்டாம் என்று ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் சென்ற ஞாயிறு திவ்யன் தன்னைப் பற்றிப் பேச வேண்டுமென்று கோபாலனையும் ஆனந்தியையும் ஹாலுக்கு அழைத்தான்.

ஏதோ திருமணம் செய்ய சம்மதிக்கப் போகிறான் என்று சந்தோசத்துடன் இருவரும் ஹாலுக்குள் சென்று அமர்ந்தனர்.

ஒன்றும் சொல்லாமல் திவ்யன் இருவர் முகத்தையும் பார்த்தான்.

நீங்கள் எனக்கு கலியாணம்பேச வேண்டாம். நானே எனக்கு ஒரு துணையைத் தேடிக்கொண்டன். ஆங்கிலத்தில் திவ்யன் சொல்ல கோபாலனும் ஆனந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இருவர் முகத்திலும் இருந்த சந்தோசம் மெல்ல மறையத் தொடங்கியது.

"தம்பி நாங்கள் இவ்வளவு நாட்களாக உனக்கு ஒரு நல்ல மனைவி அமையவேண்டும் என்று எங்கடயாட்களிட்ட சொல்லி தேடிக்கொண்டிருக்க நீ இப்படி வந்து சொல்லுறாய்" ஆனந்தி இழுத்தாள்.

எனக்கும் அவரைப் பிடிச்சிருக்கு. அவருக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. அவரும் டாக்டர்தான். ரெண்டு பேருக்கும் ஒன்றரை வருசமாகத் தொடர்பு. ஒன்றாகத்தான் வேலை செய்யிறம். அதோட ஒன்றாகத்தான் இருக்கிறம்.

என்னடா தம்பி அவர் அவர் என்று சொல்லுறாய். பதட்டத்துடன் கோபாலன் கேட்க அவரின்ர பெயர் டாக்டர் ஜேம்ஸ் கிரிஸ்டி என்று எந்தவித தயக்கமும் இல்லாமல் சொன்னான் திவ்யன்.

கோபாலனுக்கு உலகமே சுற்றியது. ஆனந்தி கத்தி அழுதாள். திவ்யன் தலையைக் குனிந்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

"பிள்ளைகளைப் பெத்து கஸ்டப்பட்டு வளர்த்து படிப்பிச்சு ஆளாக்க, அதுகள் தாங்கள் நினைச்சபடி அவள் ஒரு வெள்ளையனை, இவள் ஒரு வெள்ளைப் பெடியனை...." சொல்லிச் சொல்லி அழுதாள் ஆனந்தி.

கோபாலனுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை. அவரா.... அவரா... என்று முணுமுணுத்த வண்ணம் அமர்ந்திருந்தார். பின்பு "எல்லாத்துக்கும் காரணம் நீதாண்டி. எங்கட இனசனத்தோட பழகவிடாமல் வெள்ளை வெள்ளையென்று வெள்ளையரோட பழகவிட ரெண்டும் எப்படிப் பழகி வந்து நிற்குதுகள் என்று பார்த்தியே" கத்தினார்.

அவரால் இன்னமும் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியவில்லை. ஆனந்திக்கும் தான்.

ஆனந்தியின் யோசனையெல்லாம் பிள்ளைகள் ரெண்டும் தங்கட போக்கில் போனது மாத்திரமல்ல, உறவினர்கள் நண்பர்கள் கேட்டால் எப்படி முகம் கொடுத்து பதில் சொல்வது என்பதும்தான்.

கோபாலன் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து வேலைக்குப் போகவில்லை. வாழ்க்கையே சூனியமாகிவிட்டது போன்று உணர்ந்து அழுதுகொண்டிருந்தார்.

எங்கட பண்பாடுகளையும் கலாச்சாரத்தையும் கற்றுக்கொடுத்தும் சில பிள்ளைகள் வழிதவறிப்போகுதென்டால் எங்கட முறைகளை விட்டுவிட்டு மற்ற இனத்தவரின் கலாச்சாரமும் பண்பாடுகளும் மொழியும் பெரிதென்று நினைத்துக் கற்றுக் கொடுப்பதன் விளைவு இதுதான் என்று கோபாலனுக்கும் ஆனந்திக்கும் இப்பதான் புரிந்திருக்கிறது. இப்படியே போனால்.... எமது இனத்தின் அடையாளம்? நினைத்துப் பார்த்து புரிந்து செயற்படுங்கள் பெற்றோர்களே என்று சொல்ல வேண்டும் என்று கோபாலனுக்குத் தோன்றினாலும் ஊமையாக அமர்ந்திருந்தார். ●





ஏ.ஜே.ஞானேந்திரன்

# இலவசத்திற்காக இருபத்தி மூன்று தடவை!

அட இலவசம் யாரைத்தான் விட்டு வைக்கின்றது? தங்கள் உறவுக்குள், விவாகரத்து-திருமணம் என்று மாறி மாறி 23 தடவைகள் செய்து, அரசு அளிக்கும் இலவச குடிமனைகளைப் பெற்றுள்ள கும்பலின் மோசடி அம்பலத்திற்கு வந்துள்ளது. சீனாவின் ஷெஜியாங் மாகாணம் லிஷுயி நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அந்நாட்டு அரசு மக்களுக்கு இலவசமாக வீடு கட்டி தருகிறது.அதாவது, தற்போது அந்த மக்கள் இருக்கும் இடத்தை அரசு எடுத்துக்கொண்டு அதற்கு பதிலாக அதே கிராமத்தில் வேறொரு இடத்தில் 430 சதுர அடி அளவிலான வீடுகளை இலவசமாக வழங்கி வருகிறது. சகோதரியை, மைத்துனி என்று நீண்டு, பெற்ற தாயையும் மணப்பதாக பதிவு செய்து பல தடவைகள் குடிமனைகளைப் பெற்றுள்ளார்கள் இந்த மோசடிக்காரர்கள். இப்படி Pan என்பவரின் குடும்பத்தில் உள்ள 11 பேர், தங்களுக்குள்ளேயே 23 முறை திருமணம் செய்துகொண்டு விவாகரத்து பெற்றுள்ளனர்.அதன் மூலம் இந்த குடும்பத்துக்கு 11 இலவச வீடுகள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. காய்கறியானாலும் மீன்கடையானாலும்; கடைசியாய் கேட்டுப்பெறுவது - இலவசமாய் ஒரு துண்டு!



# மதுபானத்தின் வருகை

முன்பெல்லாம் அரபு நாடுகளில் மதுபானம் அருந்துவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் பொருளாதார ஜாம்பவான்களாக மாறிக் கொண்டு வரும் பல அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்தை மெல்ல மெல்ல தம் மண்ணிலும் கொண்டு வருகின்றன. குளிக்கவென்று நீச்சல் தடாகத்தில் குதித்து விட்டால், தலையைத் தலைய சேலையைக் கட்டிக் கொண்டிருக்க முடியுமா? கட்டாரில் 2022இல் நடக்கப் போகும் உலக வெற்றிக் கிண்ணத் திருவிழாவில், மதுபானங்களை விற்க அரசு பல இடங்களில் அனுமதித்திருப்பதோடு, விலையும் 50 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. என்றாலும் பொது இடங்களில் முதுபானம் அருந்த முடியாது. (சாதாரணமாக ஒரு டின் பியரின் விலை 10 டொலர்) "எங்கள் கலாச்சாரத்தில் மதுபானம் இல்லை. ஆனால் இது உலகளாவிய திருவிழா என்பதால், ஓரளவு கட்டுபபாட்டை தளர்த்துகிறோம்" என்கிறார் ஓர் அதிகாரி.

பாய் வியாபாரி படுத்து உறங்குகிறான் துண்டு விரித்து..



# இதுதான் இன்ப அதிர்ச்சியா?

பிரான்ஸ் தலைநகர் பாரீசின் புறநகர் பகுதியான காம்பிக்னே நகரை சேர்ந்த 90 வயது மூதாட்டி 1960-ம் ஆண்டில் கட்டப்பட்ட தனது பழமையான வீட்டை விற்க முடிவு செய்தார். ஏல நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகள் மூதாட்டியின் வீட்டுக்கு சென்றபோது சமையலறையில் எரிவாயு அடுப்புக்கு மேலே பழமையான ஓவியம் ஒன்று தொங்க விடப்பட்டிருந்ததை கண்டனர். முதாட்டிக்கு இந்த ஓவியம் பற்றிய எந்த விபரமும் தெரியாது.. இதையடுத்து, அந்த ஓவியத்தை எடுத்து ஆய்வு செய்தபோது அது 13-ம் நூற்றாண்டில் இத்தாலிய ஓவியரான சிமாய்பூ என்பவரால் வரையப்பட்டது என்று தெரியவந்தது. மேலும் அந்த ஓவியத்தின் மதிப்பு 6 மில்லியன் யூரோ என்று அதை ஆய்வு செய்தவர்கள் கூறியிருக்கிறார்கள். மீதிக் கதை தெரியுந்தானே?

சிவன் ஓவியம் வரைகிறார் கிறிஸ்தவர் தெரிகிறது இயேசுவின் சாயல்.




# சுற்றுலா விசா தருகிறோம்..

பூமியென்ன காமதேனுவா? கையிருப்பிலுள்ள எண்ணெய் வளம் மெல்ல மெல்ல அருகிக் கொண்டே போவதால், வளைகுடா நாடுகள், தமது பொருளாதாரத்தைப் பலப்படுத்த மாறுபட்ட யுக்திகளைக் கையாளத் தொடங்கி விட்டன. சிங்கப்பூரைப் போல சுற்றுலா விசா வழங்க, சவுதி அரேபியா முதற் தடவையாக முடிவெடுத்துள்ளது.சவுதி அரேபியா சமீபகாலமாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தனது கச்சா எண்ணெய் கிடங்குகள் தாக்கப்பட்டதையடுத்து, பொருளாதாரத்தை




மேம்படுத்துவதற்கு மற்ற துறைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு சவுதி தள்ளப்பட்டுள்ளது.இந்த சுற்றுலா விசாவை அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்பட 49 நாடுகளை சேர்ந்தவர்கள் இணையதளம் மூலமாக பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சுமார் 5 லட்சம் ஹோட்டல் அறைகளை உருவாக்குதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அவசியம் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

குடை விரித்தது மழை நின்றதும் காளான் ....!






# யார் உயர்ந்தவர்?

கடவைச் சீட்டுகள் எல்லோருக்கும் தெரிந்தவைதான். ஆனால் இவற்றுள் உயர்ந்தவர் யார் என்று எப்பொழுதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? சமீபத்தில் இது பற்றிய ஆய்வை முடித்து, அந்தந்த நாடுகளின் பலத்திற்கேற்ப, கடவைச் சீட்டுகளை வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.ஆசிய நாடுகளான ஜபாபான், சிங்கப்பூர் முதலிடம் பெறுகின்றன. இந்த நாடுகளின்அ கடவைச் சீட்டுடன் 189 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். கொரியா, ஜேர்மனி, பின்லாந்து நாட்டு கடவைச் சீட்டுகளுடன் 187நாடுகளுக்கு விசா வேண்டியதில்லை. டென்மார்க், இத்தாலி, லக்ஸன்பேர்க் 186 நாடுகளுடன் மூன்றாம் இடத்தைப் பிடிக்கின்றன. பிரான்ஸ், சுவீடன், ஸ்பெயின் -185 நாடுகள். ஆஸ்திரியா, ஒல்லாந்து, போர்த்துக்கல், சுவிட்சிலாந்து ஆகியன 184 நாடுகளுடன் 5ஆம் இடத்தைப் பிடிக்கின்றன. கடைசி இடம் -அதாவது 125வது இடம் ஆபுகானிஸ்தானுக்கு!!!!

"தலைக்கனத்தால்" புகழ் பெற்றது, பம்பரம் !



# ஆழ்துளைக் கிணற்றில் ஒரு பயங்கரம் சடலமாக மீண்ட சுர்ஜித்தின் பரிதாபம்

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த நடுக்காட்டுப்பட்டியில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் 2 வயதுக் குழந்தை சுர்ஜித் வில்சன் தவறி கீழே விழுந்தான். கடந்த 25-ம் தேதி மாலை 5.30 மணியளவில் விழுந்த குழந்தையை மீட்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இருப்பினும் மனம் தளராமல் மீட்புக் குழுவினர் சுர்ஜித்தை மீட்கப் போராடினர். மீட்புக் குழுவினரின் ஒவ்வொரு முயற்சியும் கடும் சவால்களாகவே இருந்தது. 80 மணி நேரத்துக்கு மேல் மீட்புப் போராட்டம் நடந்தது.

ஆரம்பத்தில் சுர்ஜித் விழுந்த ஆழ்துளைக் கிணற்றில் நவீன கருவிகள் மூலம் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு ஆழ்துளைக் கிணற்றில் அருகே ராட்சத பள்ளம் தோண்டப்பட்டது. அப்போது, பாறைகள் கடினமாக இருந்ததால் ஜேசிபி, கிட்டாச்சி ஆகிய இயந்திரங்களின் கைகள் உடைந்தன. இதனால் பள்ளம் தோண்டும் பணி நிறுத்தப்பட்டது. இதையடுத்து, சுர்ஜித் விழுந்த ஆழ்துளைக் கிணற்றின் அருகே புதியதாக ஆழ்துளைக் கிணறு போடப்பட்டது. அப்போது 20 அடிக்குக்கீழ் பாறைகள் இருந்ததால் புதியதாக ஆழ்துளைக் கிணறு போடும் பணியும் மீட்புக் குழுவினருக்கு கடும் சவால்களாகவே அமைந்தன. இறுதியில் சுர்ஜித்தின் சடலத்தை 29 அதிகாலையில் மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

இந்தப் பணியில் ஈடுபட்ட புதுக்கோட்டை மாவட்ட தீயணைப்பு அலுவலர் (பொறுப்பு) செழியனிடம் பேசினோம்.

"சுர்ஜித்தை மீட்கும் பணியில் திருச்சி, மதுரை, வேலூர் ஆகிய மண்டலங்களைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இரவு பகல் பாராமல் சுழற்சிமுறையில் மீட்புக் குழுவினர் பணியில் ஈடுபட்டிருந்தனர். தீயணைப்பு



வீரர்களோடு இதர மீட்புக் குழுவினரும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆழ்துளைக் கிணற்றில் சுர்ஜித் 27 அடியில் சிக்கியிருந்தபோது கயிறு மற்றும் நவீன கருவிகள், கேமரா ஆகியவற்றின் உதவியோடு மீட்க முயற்சி செய்தோம்.

சுர்ஜித் விழுந்த ஆழ்துளைக் கிணற்றின் அமைப்பு மற்றும் பாறைகள் மீட்புப் பணியில் சிக்கலை ஏற்படுத்தியது. சுர்ஜித் சிக்கிய ஆழ்துளைக் கிணறு 20 அடி வரை 6 இஞ்ச் அகலத்தில் இருந்தது. அதற்குக்கீழ் அதைவிட 4 இஞ்ச் அகலத்தில் போர் போடப்பட்டிருந்தது. இதனால் மேலிருந்து கீழே விழுந்த சுர்ஜித்தின் தலை அந்த இடத்தில் சிக்கிக்கொண்டது. இதனால் கயிறு மூலம் சுர்ஜித்தின் கைகளைக் கட்டி தூக்க முயன்றபோது அது பலனிக்கவில்லை. மேலும், சுர்ஜித்தின் உடல் பருமன் குறையத் தொடங்கியதால் அவர் கொஞ்சம் கொஞ்சமாக கீழே சென்றுகொண்டிருந்தார். முதலில் அவர் கீழே செல்வதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சுர்ஜித்தை ஏர் லாக் மூலம் பிடித்து வைத்திருந்தோம். இந்த முயற்சிகள் மேற்கொள்வதற்குள் சுர்ஜித் 88 அடி ஆழத்துக்கு சென்றுவிட்டார்.

இதையடுத்து ரிக் இயந்திரம், போர்வெல் மூலம் புதிய ஆழ்துளை கிணறு தோண்டப்பட்டது. 1.2 மீட்டர் சுற்றளவில் தோண்டப்பட்ட ஆழ்துளை கிணற்றுக்குள் இறங்க 12 தீயணைப்பு வீரர்களைத் தயார் நிலையில் வைத்திருந்தோம்.

ஆனால், பாறைகள் காரணமாக புதிய ஆழ்துளைக் கிணறு தோண்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. முதலில் தைரியமாக போதிய உயிர்காக்கும் கருவிகளோடு நகைமுகன் என்ற தீயணைப்பு வீரர் இறங்கினார். அதன்பிறகு 45 அடி ஆழத்துக்குள் அஜித்குமார் என்ற வீரர் உள்ளே இறங்கினார். தொடர்ந்து புதிய ஆழ்துளை கிணறு தோண்டப்பட்ட சமயத்தில்தான் சுர்ஜித் விழுந்த கிணற்றுக்குள் இருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

இதுகுறித்து மீட்புக் குழுவினர் மற்றும் அமைச்சர்கள், உயரதிகாரிகளுடன் நள்ளிரவில் ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது, சுர்ஜித் உயிரோடு இல்லை என்ற தகவலை உறுதிப்படுத்தியதும் அவர் விழுந்த ஆழ்துளைக் கிணற்றுக்குள் நவீன உபகரணங்கள் மூலம் சுர்ஜித்தின் சடலத்தை மீட்க முடிவு செய்யப்பட்டது. உடனடியாக அவரின் சடலத்தை கொக்கிகள் மூலம் மேலே தூக்கி வந்தோம். சுர்ஜித்தை உயிரோடு மீட்கத்தான் போராடினோம். ஆனால், அவரை உயிரோடு மீட்க முடியாதது மீட்பு குழுவினருக்கு கடும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் இது எங்களுக்கு ஒரு அனுபவ பாடம். இதன்மூலம் பல பாடங்களை கற்றுக்கொண்டோம்" என்றார் வேதனையுடன்.

# லண்டனில் வடமாகாணத்தின் ஆளுநருடன் சந்திப்பு



லண்டனுக்கு விஜயம் செய்துள்ள வடமாகாணத்தின் ஆளுநர் சுரேன் ராகவனுடனான ஒரு சந்திப்பு நியூமோல்டன் அபே சிமைல் மண்டபத்தில் 20.10.19 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. நாற்பது பேர் வரை கலந்துகொண்ட இந்த நிகழ்வு ஆரோக்கிய மானதும் மகிழ்ச்சியானதுமான நிகழ்வாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், உருவாக்க வேண்டிய கட்டமைப்புக்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், கல்வி, தொழில் வாய்ப்பு, காணிப் பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை என பல விடயங்கள் பற்றி நீண்ட விளக்கத்தை ஆளுநர் தெரிவித்தார். தான் பதவியேற்ற எட்டு மாத காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்டமைப்புக்கள், பொருளாதார முன்னேற்றங்கள் என பல விடயங்களை அவருடைய பேச்சு பிரதிபலித்தது.

ஆளுநருடன் வருகைதந்திருந்த அவருடைய செயலாளர் திரு சத்தியசீலன் (இவர் வட மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும் கூட) பொருளாதார ஆலோசகர் கஜதீரா ஆகியோரின் பங்களிப்பும் விளங்கங்களும் இந்தச் சந்திப்பை மேலும் பயனுள்ளதாக்கியது.

இந்த நிகழ்வை கல்வி அபிவிருத்தி அரங்கம் ஏற்பாடு செய்தது. நிகழ்வை விமலதாசன் நெறிப்படுத்தினார். சச்சிதானந்தன் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

*- கெங்கா*

# அவரையும் புரியும்! உலகத்தையும் தெரியும்!!



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

முன் பிறந்து வருகிறோம்
பின் இறந்து போகிறோம்,
முன் பிறந்து வருகிறோம்
பின் இறந்து போகிறோம்,

கண் திறந்து வருகிறோம்
கண் மூடிப் போகிறோம்,
கண் திறந்து வருகிறோம்
கண் மூடிப் போகிறோம்,

இதை எண்ணி வாழ்பவர்கள்
எத்தனை பேர்?
இதை எண்ணி மாள்பவர்கள்
எத்தனை பேர்?

கடவுளைத் தேடுபவர்கள்
எத்தனை பேர்?
இடர்களில் மீளுபவர்கள்
எத்தனை பேர்?
மனித கண்களுக்குப்
புலப்படாததைத்
தேடுவது மடமையோ?
மனித கண்களுக்குப்
புலப்படுவதைத்
தேடுவது வழமையோ?

உமக்குள் இருப்பவரை யாரென்று
காண்பீர் மனிதா?
உமக்குள் இருப்பவரை யாரென்று
சொல்வீர் மனிதா?

தேடிப் பாரும் இதன் விளக்கம்
புரியும் உமக்கு!
நாடிப் பாரும் இதன் உண்மையும்
விளங்கும் உமக்கு!

அன்றே உமக்கு அவரையும்
புரியும் தமக்கு.
அன்றே உமக்கு இந்த
உலகத்தையும்
தெரியும் தமக்கு.



# இலண்டனில் சிறப்பாக நடந்த 'தமிழ் உதயா'வின் கவிதை நூல்கள் வெளியீடு



இலண்டன் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் வெளியிட்ட கவிஞர் தமிழ் உதயாவின் கவிதை நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இலண்டன் ஹரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் 19.10.2019 சனிக்கிழமை மாலை சாகித்ய ரத்னா, பேராசிரியர் சபா. ஜெயராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் முன்னிலையில், ஏழு நூல்களின் வெளியீட்டு விழா செல்வி ஆயகி தவராசகுமாரன் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. திருமதி. சந்திரவதனி, திரு. நாமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கவிதை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பன போன்ற ஆழமான கருத்துக்களை விளக்கமாகக் கூறி, கவிஞர் தமிழ் உதயாவின் கவிதைகளிலுள்ள சிறப்புகளைப் பாராட்டிப் பேசினார்.

கவிஞர் கந்தையா இராஜமனோகரன் தமிழ் உதயாவின் எழுத்துக்களை வியந்துரைத்தார். 'தமிழ் உதயா'வின் ஒவ்வொரு நூல்களையும் ஏழு பேர் நயந்துரைத்து, கவிதைக்குள்ளிருந்த கருத்துக்களைச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

'எனக்குப் பறவை நிழல்' என்ற நூலைப் பற்றி கலா ஸ்ரீரஞ்சன், 'நீரோவின் இசைக் குறிப்புகள்' சாம் பிரதீபன், 'அகாலத்தின் நித்திய கடல்' அ. இன்பன், 'பாஷோவன் அறையில்' றஜிதாசாம், 'ஆண் நிற வெயில்' இளைய அப்துல்லா, 'Bleeding Blossoms on Bodhi Trees' கௌரி பரா, 'போதி மரங்களில் இரத்தப் பூக்கள்' செல்லத்தம்பி மகேந்திரன் ஆகியோரின் நயந்துரைகள் இடம்பெற்றன.



ஐபிசி சதீஷ் நிகழ்ச்சிகளை நேர்த்தியாகத் தொகுத்து வழங்கினார்.

நூல்களின் ஆசிரியர் 'தமிழ் உதயா'வின் உருக்கமான ஏற்புரை சபையோரை தங்கள் பக்கம் இழுத்தது. "பேராசிரியர் சபா ஜெயராஜா தலைமை ஏற்று நடத்தியது மட்டுமன்றி காத்திரமான அவரது உரையில் நெகிழ்ந்து போயிருக்கிறேன். என்னைப் பற்றி முன்னிகழ்வுகள் அறியாதவர்கள் என் புத்தகங்களைச் சிலாகித்தாலே சாலப் பொருத்தம் என்பதில் விருப்பம் நிறைந்தவள். அவ்வாறே என் குரல் கூட அறிந்திராத மதிப்புரையோடு சிறப்புரை தந்த சுதுமலைக் கவிஞர் ராஜமனோகரன் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி" என்று உணர்வுபூர்வமாக ஏற்புரை நிகழ்த்தினார். மண்ணை நேசிக்கிற நிறைவேறான ஒரு நூல் வெளியீட்டு விழாவைப் பார்த்த நிறைவு ஏற்பட வைத்தது.








**நவஜோதி ஜோகரட்னம்**

# புதல்விகளுடன் நடன அரங்கேற்றம் நிகழ்த்தி அசத்திய ஈழத் தாய்!



ஒரு நர்த்தகியாக மிளிர வேண்டும் என்பதற்காக பரணீதரி தில்லைநாதன் தன்னைப் பல்வேறு பயிற்சிகளுக்கு உட்படுத்தி விடாமுயற்சியுடன் ஒரு தாயாக நின்று அரங்கேற்றம் செய்வது என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

கொழும்பில் ஸ்ரீமதி. சிவானந்தி ஹரிதர்ஷனிடம் பதினான்கு வருடங்களுக்கு மேலாக நாட்டியத் துறையில் கற்றுத் தேறியவர் பரணீதரி. வட இலங்கை சங்கீத சபையில் தனது 5ஆவது தராதரத்தை வெற்றிகரமாக செய்து முடித்தது மாத்திரமன்றி, இலங்கை க.பொ.த. சாதாரண, உயர்தரங்களிலும் சித்தி எய்தியிருப்பது அவரது நாட்டியத்தின் ஆர்வத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது. இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் இவரது நாட்டிய நிகழ்ச்சி ஒளிபரப்பாகிய பெருமைக்குரிய பரணீதரி இலண்டனிலும் பல மேடைகளில் தனது நாட்டியத் திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் இலண்டன் பாரதிய வித்யா பவனில் சென்னை கலாஷேத்ரா ஆசிரியர்கள் இணைந்து நடத்திய உயிர் - உடல் என்ற நாட்டிய நிகழ்ச்சியில்கூட அவர்களுடன் இணைந்து தனது நாட்டியத் திறமையை வெளிப்படுத்தியிருந்தமை மிகச் சிறப்பாகும்.

பிரபல நாட்டியத் தாரகை ஸ்ரீமதி ஸ்ரெலா உப்பால் சுப்பையாவை குருவாகக் கொண்டு நாட்டியத் துறையில் மீண்டும் தன்னை வளர்த்தெடுத்துக் கொண்டார். கடந்த அக்டோபர் மாதம் இலண்டன் பாரதிய வித்ய பவனில் தனது அரங்கேற்றத்தை தனது துணைவர் திரு. தில்லைநாதன் மிகுந்த ஒத்துழைப்போடு மிகச் சிறப்பாக நடத்தினார்.

நாட்டியத் தாரகை பரணீதரியின் துல்லியமான நடனத்திற்குப் பிசிரற்ற கணீரென்ற குரலால் அருமையான பாடலை வழங்கிய சென்னை கே. செய்சங்கரின் பாடலும், கே.பி. ராகேஷின் நட்டுவாங்கமும் உயிர்கொடுத்தன என்றுதான் கூறவேண்டும். ஒன்பது பாரம்பரியங்களைக் கொண்ட மிருதங்க மேதை காரைக்குடி கே. கிருஷ்ணமூர்த்தியின் மிருதங்க வாத்தியத்தின் திறமையோ அபாரமாகத் தெரிந்தது. பரணீயின் பாதங்களோடு சேர்ந்து பின்னிப்பிணைந்து பரவசத்தில் ஆழ்த்தியது என்றே கூறவேண்டும். கலைக்குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பிரபல சிதம்பரநாதன் ஜலதரனின் வயலின் இசை, டாக்டர் அபிராம் சகாதேவனின் கெஞ்சிரா வாசிப்பு, வேணுகானமணி பிச்சையப்பா ஞானவரதனின் புல்லாங்குழல் வாசிப்பு மிக தாள லயங்களோடு இணைந்து பரணீயின் நாட்டியம் அதற்கு ஏற்றாற்போல் மக்களை அழகியல் லயிப்பில் ஆழ்த்திவிட்டிருந்தது என்பதில் ஐயமில்லை.

நடராஜ அஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம் போன்ற சில உருப்படிகளை ஆரம்பத்தில் அம்மா பரணீயுடன் இணைந்து வழங்கிய அவருடைய புதல்விகளான அபிஷா தில்லைநாதன், ஹரிணி தில்லைநாதன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ரத்தினம் பவுண்டேசன் டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன் இவர்கள் அனைவரையும் மிகவும் பாராட்டி விழாவின் இறுதியில் பேசியிருந்தமை சிறப்பான விடயம்.

பதம், தில்லானா போன்ற உருப்படிகள் சற்று வித்தியாசமான வகையில் ஸ்ரீமதி ஸ்ரெலா உப்பால் சுப்பையாவால் வடிவமைக்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரிய விடயம். நடனக் கலை ரசிகர்களால் மட்டும் மண்டபம் நிறைந்து, பரணீதரியை ரசித்து கரகோசித்து அலங்கரித்திருந்தமையை விசேடமாக இவ்வரங்கேற்றத்தில் அவதானிக்க முடிந்தது.




# லண்டனில் பாலேந்திராவின் 5 நாடகங்கள்



## 40வது ஆண்டாக தொடரும் ஈழத்துக் கலைஞரின் பணி

லண்டனில் கலை நிகழ்ச்சிகளை பெரும்பாலும் தென்னிந்திய சினிமா இசை ஆக்கிரமித்துள்ள சூழலில் , நல்ல நாடக முயற்சிகளை தொடர்ந்து பல வருடங்களாக செய்து வரும் திரு பாலேந்திரா தலைமையிலான தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் கடந்த இரண்டு மாதங்களில் ஐந்து காத்திரமான நாடக மேடையேற்றங்களை வெவ்வேறு நலன்புரி அமைப்புகளுக்காக நிகழ்த்தியுள்ளனர்,

புதிய-வயதில் இளைய - நடிகர்களை இணைத்து இந்த மேடை நிகழ்ச்சிகள் நடைபெற்றமை இவர்களது நாடக இயக்கத்திற்கு மேலும் வலு சேர்க்கிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 24-08-2019 இல் "சர்ச்சை" நாடகம், லண்டன் ஹரோ பகுதியில் அமைந்த Zoroastrian Centre இல் மேடையேறியது.

பாரிஸ் நகரில் கடந்த டிசம்பர் மாதம் நடந்த தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு நாடக விழாவை சிறப்பாக ஒழுங்கு செய்த, பாரிஸ் இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியம், லண்டனில் முதல் முறையாக ஒழுங்கு செய்த "முத்தமிழ் மாலை" நிகழ்வில் ஒரு அங்கமாக இந்த நாடகம் மேடையேறியது."கல்விக்கு கரம் கொடுக்க கலையால் ஒரு களப் பணி" என்ற நோக்கில் இவர்களது நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.பிரான்ஸில் வசிக்கும் இலங்கைத் தமிழ் பழைய மாணவர்களால், பழைய மாணவர் சங்கங்களின் ஆதரவுடன், காலத்தின் இன்றியமையாத தேவை கருதி இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியம் 24.5.2015ல் பாரிஸில் அங்குரார்ப்பணம் செய்யபட்டுள்ளது. இது போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலம் நிதி சேர்த்து தாயகத்தில் உள்ள இளையவர்களின் கல்விக்கு உதவி வருகிறார்கள். நிகழ்ச்சிகளில் ஈழத்து கலைஞர்களே முற்றாக பங்கேற்பது குறிப்பிடத் தகுந்தது. "சர்ச்சை " நாடகத்தில் பாலேந்திராவின் நெறியாள்கையில் வாசுதேவன், யசோமன், பாலநந்தன், சதீஸ்,மற்றும் இவர்களது 16 வருடங்களுக்கு மேலாக தொடரும் நாடகப் பள்ளியில் பயிற்றப்பட்ட இளையவர்களான சந்தோஷ்,சாருஷன் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

பாலேந்திரா தமது நாடக இயக்கத்தை வலுவாக்க பல அமைப்புகளில் உள்ளவர்களை பயிற்றுவித்து அவர்களைக் கொண்டே நாடகங்களை மேடையிடுவது உண்டு.இலங்கையில் தயாரிக்கப்பட்ட இவர்களது பல நாடகங்கள் பேராதனையில் மேடையேறி நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. லண்டன் பேராதனை பல்கலைக்கழகஒன்றுகூடல் "PERA NIGHT 2019" நிகழ்வில் பாலேந்திராவின் நெறியாள்கையில் "இடைவெளி" நாடகம் புதிய தயாரிப்பாக, பேராதனை பழைய மாணவர்களைக் கொண்டு, 14-09-2019



அன்று லண்டனின் வடமேற்கு பகுதியில் வெம்பிளியில் மேடையேறியது.அபத்தப் பாணியில் அமைந்த இந்த நாடகம் 40 வருடங்களுக்கு முன்னர் 10-06-1979 இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில், பல்வகை நாடகங்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில், முதலாவதாக பாலேந்திராவால் மேடையேற்றப்பட்டமை குறிப்பிட தகுந்தது.பேராதனை பல்கலைக் கழக பொறியியல் பட்டதாரிகளான குமரன், சதீஸ் ஆகியோரோடு தமிழ் அவைக்காற்று கலைக் கழக லண்டன் தமிழ் நாடகப் பள்ளி உறுப்பினர் சரிதா அண்ணாதுரை ஆகியோர் நடித்தனர்.





மறைந்த தமிழ் மூதறிஞர் "தமிழ் ஓசை " திரு சோ சிவபாதசுந்தரம் அவர்களால் லண்டனில் 90 களில் ஆரம்பிக்கப்பட்ட "கலாபவனம் " என்ற அமைப்பு லண்டனில் CROYDON பகுதியில் சில வருடங்கள் இயங்கியது.தற்போது லண்டனில் இளையவர்கள் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் நண்பர்கள் சிலர் - திரு மா சத்தியமூர்த்தி ,திரு பத்மமோகன் வைத்திய கலாநிதி நமசிவாயம் போன்றோர் -முயற்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது முதலாவது நிகழ்ச்சியாக முத்தமிழ் விழா குரொய்டனில் 15-09-2019 இல் நடைபெற்றது. அந்த நிகழ்வில் இடைவெளி நாடகம் இரண்டாம் முறையாக மேடையேற்றப்பட்டது.

ஊரில் பல நல்ல பயனுள்ள திட்டங்களை நடத்தி வரும் வேலணை ஒன்றிம் பிரித்தானியா வழங்கிய "6வது ஆண்டு விழாவும் கலைமகள் விழாவும்" நிகழ்வில் (12-10-2019) புதிய தயாரிப்பான "இடைவெளி" நாடகம் மூன்றாம் தடவையாக மேடையேறியது.இளையவர்களது கலை வெளிப்பாடுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் நிகழ்ச்சிகளை வடிவமைத்திருந்தமை பாராட்டுக்குரியது.

லண்டன் தமிழ் பாடசாலைகளில் நுண்கலைகளை பயின்று வெளியேறும் பழைய மாணவர்களை இணைத்து அவர்களது கலைத்திறமைகளுக்கு களம் அமைக்கும் நல்ல முயற்சிகள் இங்கு அருமையாகவே உள்ளது. அந்த வகையில் LATA பழைய பெற்றோர் ஆசிரியர் சங்கம் நடத்தும் முத்தமிழ் விழா முன்னுதாரணமாக விளங்குகிறது. இவர்களது "முத்தமிழ் விழா 2019" 26-10-2019 இல் என்பீல்ட் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. இளையவர்கள் நிகழ்வுகளுடன் நடைபெற்ற அந்த விழாவில் ஈழத்து நாடகாசிரியர் திரு மாவை நித்தியானந்தன் எழுதிய "அவசரக்காரர்கள் " நாடகம் சிறப்பு அம்சமாக மேடையேறியது. நெறியாளர் பாலேந்திராவுடன், ஆனந்தராணி பாலேந்திரா, கணேசலிங்கம் மற்றும் இவர்களது நாடகப் பள்ளி மாணவன் சிறுவன் மாசிலன் கருணாகரன் ஆகியோர் நடித்தனர். இது இவர்களது மிக பிரபல்யமான நாடகமாகும்.

தன்னார்வ தொண்டர்களைக் கொண்டு நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இயங்கும் இவர்களது நாடக முயற்சிகள் தொடர வாழ்த்துவோம். ●



## லண்டனில் நூல் வெளியீடு

# ஊடகத்திரு எஸ்தி 50+







ஊடக உலகில் நன்கு அறிமுகமானவரும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இத்துறையில் பணியாற்றி வருபவருமான ஷஎஸ்தி| என்ற திரு எஸ். திருச்செல்வத்தின் ஊடகப்பணியை எடுத்துக்கூறும் ஊடகத்திரு எஸ்.தி. +50 என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 13ஆம் திகதி லண்டன் ஹறோ சிவிக் சென்ரர் சபாமண்டபத்தில் நடைபெற்றது.

உயிர் அச்சுறுத்தல்களையும் இழப்புகளையும் துச்சமென தூக்கியெறிந்துவிட்டு இடர்களை மீறி ஊடகத்துறையில் அவர் ஆற்றிவரும் சாதனைகள் பல. தொலைநோக்குப் பார்வையிடும் செயற்படும் ஊடகவியலாளர் இவர்.



50 ஆண்டுகளுக்கு மேலாக அவரோடு இணைந்து பயணித்த, நன்கறிந்த உலகெங்கும் வாழுகின்ற ஐம்பது ஆளுமைகள் எழுதியுள்ள இந்நூலின் வெளியீட்டு விழா முதலில் கனடாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது.

தாய்மண்ணில் ஈழமுரசு, முரசொலி ஆகிய இரு நாளிதழ்களை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராகவிருந்து பணியாற்றிய இவர், எந்த மண்ணுக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாரோ அந்த மண்ணில் தொடர்ந்து வாழ முடியாமல் உயிருக்குயிரான உறவை பலி கொடு;த்துவிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையால் கனடாவில் குடியேற்றப்பட்டவர். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தனது மனைவியுடன் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் தாய் மண்தான் அவர் உயிரோடு இரண்டறக் கலந்திருக்கிறது. அவர் பேனா அதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறது.

லண்டனில் ஒரு வித்தியாசமான நூல் வெளியீட்டுவிழா என்று இந்நிகழ்வைப் பலரும் குறிப்பிடுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் தாய்மண்ணுக்காக அதே உணர்வுடன் அவர் ஓயாது இயங்கிக் கொண்டிருப்பதுவே. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், இனஉணர்வாளர்கள் என பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்களும் ஆண் பெண் என மண்டபத்தில் கூடியிருக்க அழைப்பிதழில் குறிப்பிட்டவாறு சரியாக ஆறு மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. முதல் அரைமணி நேரம் கலந்துரையாடி தேநீர் சிற்றுண்டி உபசாரத்தை முடித்துக் கொண்டு நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

மண்டபத்தின் நடு அரங்கில் பிரதம விருந்தினர் மருத்துவப் பேராசிரியர் சேர். சபாரட்ணம் அருள்குமரன் தம்பதியரோடு திருச்செல்வம் தம்பதியரும் அமர்ந்திருந்தனர். இனப்பற்றாளரான நிகழ்ச்சி நெறியாளர் திருமதி ரூபி குமார் நிகழ்வின் தன்மைக்கேற்ப ஆரவாரமில்லாத அடக்கமான அறிமுகத்தோடு நிகழ்ச்சியை ஆரம்பித்து தொடர்ந்து நடத்தினார்.

பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்க உறுப்பினர் திரு. வி.ஆர்.இராமநாதன் முதலாவது பேச்சாளர். கனடாவில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழர் தகவல் விழாவின் நேர்த்தியையும் அதிசயிக்க வைக்கும் நேரக்கட்டுப்பாட்டையும் மனந்திறந்து பாராட்டி உரையாற்றினார்.

தமிழ் நாடகப் பணியை தாயகத்தில் ஆரம்பித்து தொடர்ந்து நாற்பது ஆண்டுகளைத் தாண்டியும் இளையவர்களை இணைத்து மேடையேற்றங்களை நடத்திவரும் தமிழ் அவைக்காற்றின் தலைவர் திரு. கே. பாலேந்திரா தமதுரையில் திருச்செல்வம் அவர்கள் தினகரனில் கடமையாற்றிய காலத்திலிருந்து கலைஞர்களைக் கைதூக்கி விடுகின்ற செயற்பாடு பற்றி குறிப்பிட்டதோடு தொடர்ந்தும் கனடாவில் அப்பணி இடம்பெறுவதை குறிப்பிட்டார்.

ஐ.பி.சி. தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் 'உண்மைகளின் தரிசனம்' புகழ் நிராஜ் டேவிட் பேசுகையில், யுத்தம் நடந்து கொண்டிருந்த ஒரு பூமியில் தினசரி பத்திரிகை ஒன்றை நடத்துவது எவ்வளவு கஷ்டம் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது. பல பாதிப்புகளையும் நெருக்கடிகளையும் தாண்டி திருச்செல்வம் ஆற்றிய பணி அளப்பரியது. ஒரு ஊடகவியலாளனுக்கு அவன் எடுத்த காரியத்தை முடிக்கிறபோது ஏற்படுகின்ற உள்ள உவகையை விபரிக்க முடியாது என்ற கருத்துப்பட தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

புதினம் ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால் தனக்கும் திருச்செல்வத்துக்குமிடையிலுள்ள நீண்டகால நெருக்கமான உறவையும், புகழ் பூத்த ஊடகவியலாளராக அவர் பரிணமிப்பதற்கு காரணமானவர்களில் தானும் ஒருவர் என தெரிவித்ததோடு பல ஆண்டுகளுக்கு முன்னர் ரொறன்ரோவில் பிரமாண்டமான முறையில் ஆயிரம் பேருக்கு மேல் நிறைந்திருக்க ஆழிக்குமரன் ஆனந்தன் நூல் வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்து தலைமை வகித்தவர் அவரே என்றும் இதனை தான் உயிருள்ளவரை நன்றியோடு மனதில் வைத்திருப்பதாக தெரிவித்தார்.

எழுத்தாளரும் விமர்சகருமான திருமதி நவஜோதி ஜோகரட்ணம் உரையாற்றுகையில் தனது தந்தையான எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் பற்றி தனக்குத் தெரியாத பல தகவல்களை திருச்செல்வம் அவர்கள் தெரிந்து வைத்திருப்பதாகக் குறிப்பிட்டு கனடாவில் பிரபலமான எழுத்தாளரும் ஊடகவியலாளருமான ஜூன் கால்வூட் ஞாபகார்த்தமான கனடிய அரசின் விருதைப் பெற்ற ஒரேயொரு தமிழர் இவர் என்பதையிட்டு அனைவரும் பெருமை அடைய முடியுமென்று கூறினார்.


ஹறோ நகர முன்னாள் மேயரும், கவுன்சிலரும், கலைஞருமான திரு. சுரேஷ்; கிருஷ்ணா (லண்டன் பாபா) பேசுகையில், தமிழர்கள் மூன்றாவது பெரும்பான்மையாக வாழும் ஹறோ நகரத்தில் இனமான தமிழர் ஒருவரின் பெருமை மிக்க விழா நடைபெறுவது எங்களுக்குப் பெருமை அளிக்கிறது. லண்டனில் அப்படியான சாதனைகளை புரிந்த ஒருவரைப் பற்றிய இந்நூல் வெளியீடு பல ஆண்டுகளாக தைப்பொங்கல் விழா நடைபெறும் ஹறோ கவுன்சில் மண்டபத்தைவிட வேறு எங்கும் நடைபெறுவது பொருத்தமாக இருக்காது. அதுவே இவ்விழாவின் சிறப்பு என்றார்.

சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் அமைப்பின் பணிப்பாளர் திரு. கோபி ரத்தினம் தமதுரையில், அரசியல் ஆய்வுகளைச் செய்கின்ற ஒருவர் எப்படி இருக்க வேண்டுமென்பதை திருச்செல்வம் அவர்களிடம் கண்டு பேசி வியந்தேன். நீண்டகால இலங்கை தமிழ் சிங்கள அரசியல்வாதிகளின் தகவல்களை விரல் நுனியில் இவர் வைத்திருப்பது என்னை வெகுவாகக் கவர்ந்தது. இங்கு வெளியிடப்படும் இவர் பற்றிய நூல் மிகவும் கனதியான ஒன்று. இதற்கும் அப்பால் இந்தியப் படையினால் தமக்கு ஏற்பட்ட இடர்களையும்,













கோட்டைக்குள் அடைக்கப்பட்ட 82 நாட்கள் சிறை பற்றியும் முழுமையான ஒரு நூலை அவர் வெளியிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

ஷஆதவன்| தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. இளையதம்பி தயானந்தா பேசுகையில் இந்த நூலுக்கு ஊடகத்திரு என்று பெயரிடப்பட்டது மிகப் பொருத்தமானதென முதலில் குறிப்பிட்டார். எஸ்தி போன்றவர்கள் ஊடகவியலாளர்களாக பணியாற்றிய காலம் துணிச்சலும் சவால்களும் உயிரச்சமும் நிறைந்தது. வேறெந்த ஊடகவியலாளருக்கும் இல்லாத சி~;ய படையின் சொந்தக்காரராக எஸ்தி இருப்பது பெருமையானது. அவரின் வழிகாட்டலில் உருவாகி உலகெங்கும் இயங்கி வரும் ஊடகவியலாளர்களே அவரின் மதிப்புக்குரிய சொத்து. எந்தப் பணிக்காக தன் மகனைப் பறிகொடுத்தாரோ அதற்குப்பிறகும் தொடர்ந்து அப்பணியில் நின்று நமக்கெல்லாம் ஆச்சரியம் தருகிறார். 60 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்காவும் அவரைக் கொலை செய்து தூக்குத் தண்டனைபெற்ற பௌத்த பிக்கு சோமராமதேரோவும் தங்களின் பௌத்த மதத்தைக் காப்பாற்ற எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது போன்ற தகவல்களை எனக்குச் சொன்னவரே அவர்தான் என்று பாராட்டினார்.




கனடா ஷதமிழர் தகவல்| வெளியீட்டகத்தின் பொது முகாமையாளர் திரு. ஆர்.ஆர்.ராஜ்குமார் உரையாற்றும்போது தமது தந்தையும் ஓர் ஊடகவியலாளராக இருந்ததால் அவருக்கும் திருச்செல்வம் அவர்களுக்கும் இருந்த நட்புறவைக் கூறி, கனடாவில் 29 வருடங்களாக மாதந்தோறும் 5ஆம் திகதி வெளிவரும் தமிழர் தகவலின் நேரக்கட்டுப்பாடு ஒழுங்கமைப்பு போன்றவைகளால் தமிழர் தகவல் கனடியத் தமிழரின் தனித்துவமான அடையாளமாக இருப்பதாக எடுத்துக் கூறினார்.



விழாவின் பிரதான ஏற்பாட்டாளரும் ஐ.பி.சி ஊடகவியலாளருமான திரு. பிறேம் சிவகுரு தமது ஊடக ஆசானைப்பற்றி குரு பக்தியுடன் கூறிய வார்த்தைகள் சபையோரின் நெஞ்சங்களைத் தொட்டது. ’அவர் அருகிலிருந்து பணிபுரிந்தவர்கள் நாம். அவரிடம் ஊடகத்துறையை கற்றவர்கள் நாம். முரசொலி பிரதம ஆசிரியரின் அறையிலிருந்தபடி தனது தடித்த கறுத்தக் கண்ணாடி ஊடாக ஊடக செய்திப்பிரிவு மேசைகளின்மீது ஓரக்கண்ணால் அவர் நோக்குவதைக் கண்டு வளர்ந்தவர்கள் நாம். ஊடகத்துறையில் சமரசத்தைக் காட்டியிருந்தால் ஆகக்குறைந்தது தனிப்பட்ட இழப்புகளையாவது அவர் தவிர்த்திருப்பார். இந்த அறத்தை உரத்துச் சொல்வதற்கு எம்மை விட்டால் வேறு யாருக்கும் உரிமையில்லை" என்று உணர்வுபூர்வமாக குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் சேர். சபாரட்ணம் அருள்குமரன் தமது உரையில், ஊடகத்துறையின் ஊடாக சமூகத்தின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற திருச்செல்வம் அவர்களின் பணி பாராட்டுக்குரியது. மூத்தவர்களையும் இளையவர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுகின்ற அவரது நோக்கு தூரப்பார்வை கொண்டது என்று குறிப்பிட்டு தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.





இறுதியில் திரு எஸ். திருச்செல்வம் ஏற்புரை நிகழ்த்தினார். ’1989ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி நான் கொல்லப்பட்டிருக்க வேண்டிய நாள். அன்று அந்தக் கொலை இடம்பெற்றிருந்தால் இலங்கையில் கொலை செய்யப்பட்ட முதலாவது பத்திரிகையாளனாக நான்தான் இருந்திருப்பேன். விதி சூழி மாறியதால் மகனைப் பறிகொடுத்து கனடா புக நேர்ந்தது. ஊடக உலகில் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப்போல என்னோடு பணியாற்றிய இளம் பத்திரிகையாளர்களுக்கும் ஏற்பட்டது. தற்போது கொழும்பு ஞாயிறு தினக்குரலின் ஆசிரியராகப் பணியாற்றும் பாரதிக்கு ஏற்பட்ட உடற்பாதிப்பு, நிமலராஜன் படுகொலை போன்றவைகள் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. நாற்பதுக்கும் அதிகமான ஆயுதக்குழுக்கள், இரண்டு நாட்டு இராணுவங்களுக்கு மத்தியில்தான் அன்று யாழ்ப்பாணத்தில் நாங்கள் பணியாற்ற வேண்டியிருந்தது. யாழ்ப்பாண மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக தமிழரால் தமிழருக்கென நடத்தப்படும் பத்திரிகைகள் இருந்தன. அந்தத் தேவையை நாங்கள் ஒரு குடும்பமாக இருந்து நிறைவேற்றினோம் என்பது ஆத்ம திருப்தியைத் தருகிறது. அதற்காக நாங்கள் கொடுத்த விலை பெறுமதியற்றது. இலங்கையில் ஊடகங்கள் மீதான தாக்குதல், குண்டுத்தகர்ப்பு, படுகொலைகள் என்பவை முதன்முறையாக யாழ்ப்பாணத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டன என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது, இது வரலாறு என்று தமதுரையில் இவர் குறிப்பிட்டார்.

நூலின் முதற்பிரதிகளை பேராசிரியர் சபாரட்ணம் அருள்குமரன், லண்டன் பி.பி.சி. தமிழோசை முன்னாள் தயாரிப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம், ஹறோ முன்னாள் மேயர் சுரேஷ் கிருஷ்;ணா, ஹறோ நகரசபை உறுப்பினர் சசி கிருஷ்;ணா, ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. எஸ். கருணைலிங்கம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். ●



"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

## Shri Kanagathurrkai Amman (Hindu) Temple trust

5, Chapel Road, London. W13 9AE. Tel : 0208-810 0835 / 0208-840 0485
Founded on 10-08-1991 Charity No.1014409
www.ammanealing.org / Email : info@ammanealing.org

**கனகதுர்க்காவின் கடைக்கண் பார்வை!**

**அடியார்கள் கொட்டும் காணிக்கை!**

### ஆலவிருட்சமான அரிய பணிகள் - முன்னெடுப்பு

**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு**

1. முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவர் திரு. P. ஸ்ரீநேசன் தலைமையில் அன்னை சாரதா முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இல்லமாகிய உறைவிடப் பிள்ளைகள் 47 பேர்களின் பராமரிப்புச் செலவைப் பொறுப்பேற்றல். இது கனகதுர்க்கை அம்மன் இல்லமாக இப்போது பெயர் மாற்றம்.

**மன்னார்**

2. நீதியரசர் கௌரவ முன்னாள் அமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையில், மன்னார் முள்ளிப்பள்ளம் என்ற இடத்தில் உள்ள சிவனருள் இல்லப் பாடசாலை மாணாக்கருக்கு கணினிகள் கையளிப்பு.

**வாகரை**

3. மட்டக்களப்பு, பழங்குடி மக்கள் வாழும் வாகரையில் மட்டு. அரச அதிபர் திரு. S. உதயகுமார் தலைமையில் ஒன்பது குழாய்க்கிணறுகள் திறந்து வைப்பு.

**வந்தாறு மூலை**

4. மட்டக்களப்பு அரச அதிபர் திரு. S.உதயகுமார் தலைமையில், வந்தாறு மூலையில் உள்ள விவேகானந்தாக் கல்லூரிக்கு கணினிகள் (Computers) கையளிப்பு.

**கட்டுமுறிப்பு**

5. மட்டக்களப்பு "கட்டுமுறிப்பு"க் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்குதலுடன், குழாய்க் கிணறுகளும் திறந்து வைப்பு.

# தியான மண்டபம்

## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர்!

### தை பிறந்தால் வழி பிறக்கும்

தியான மண்டபம் அடியார்கள் பங்களிப்பில் வேலைத் திட்ட ஆரம்பம் : தை மாதம்,
புதியன புகுதலாகும். (ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யதிட சங்கற்பம்).

**கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழுங்கி உதவுங்கள்!**

Bank Details :
SKTA Temple Trust
Lloyds Bank, Sort Code : 30-98-91
Account No.02717646

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள்!
அவள் அருளைப் பெற்றிடுங்கள்!
Please Donate as much as you can!

சிறுதுளி பெரு வெள்ளம்